# கொடிகாமம் கொலைவழக்கு: நால்வர் விடுதலை; மூவர்மீது குற்றச்சாட்டு; 23-ம தேதி விசாரணை


Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால்பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 64
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆமூலாம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் சித்திரை 3 ஏபர் 9 வியாழக்கிழமை [16-4-70]


(நீதிமன்ற நிருபர் கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம், வியா. கொடிகாமம் பஸ் சாரதி கொலை சம்பந்தமாக ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களில் நால்வர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர் சந்தேக நபர்கள் மூவர் மீது நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. சந்தேக நபர்களில் ஒருவரான அச்சுவேலியை சேர்ந்த நவரத்தினம் என்பவர் மீது பகிரங்க வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. இவ் வழக்கு விசாரணை இம்மாதம் 23-ம் திகதி நடைபெறும்.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில், நேற்றுக்காலை ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் 6 பேரும் ஆஜர் செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் பலத்த பாதுகாப்புடன் கோர்ட்டிற்கு கொண்டு வரப்பட்டனர்.

விசாரணையை பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. கதிர்காநாதன் மூவர் மீதும் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தார், இதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் சந்தேக நபர்களில் நால்வரை விடுதலை செய்து, மற்றும் இருவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு மற்றொரு சந்தேக நபரான நவரத்தினம் மீது வாரண்ட் பிறப்பித்தார்.

சந்தேக நபர்களான தம்பிமுத்து கணேசமூர்த்தி, பெருமாள் இராமலிங்கம், தம்பிமுத்து நவரத்தினம் ஆகிய மூவர் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த முருகேசு கணேசமூர்த்தி, சின்னத்தம்பி திரவிய நாயகம், கனகசபை, மகேசுவரன் ஆகிய நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் எஸ் அம்பலவாணர் ஆஜரானார் விடுதலை செய்யப்பட்ட நால்வரில் முதல் இருவரும் கொலை நடந்த மறுதினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்களாவர். மற்றும் இருவர் பொலிஸ் குழுவின் விசாரணையை தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களாவர்.

இக்கொலை சம்பந்தமாக விசாரணை செய்ய ஐவர் கொண்ட பொலிஸ் குழுவினர் நியமிக்கப்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

## அப்பலோ-13 கலத்தில் திடீர்கோளாறு

# சந்திரப்பயணத்தைக் கைவிட்டு வீரர்கள் பூமிக்குத் திரும்புகிறார்கள்

## எதிர்பாராத நிகழ்ச்சிபற்றி உலகம் முழுவதும் அதிர்ச்சி

## மூவரும்பத்திரமாகத்திரும்புவதற்கு அமெரிக்காவில் பிரார்த்தனை

ஹூஸ்டன், ஏப்ரல் 15

அம்புலித் தரையில் இறங்கும் முயற்சியைக் கைவிட்டு, பூமியை நோக்கிப் புறப்பட்டுள்ள அப்பல்லோ-13 வீரர்கள் பத்திரமாக இருப்பதாகவும், வரும் வெள்ளிக்கிழமை பசிபிக்சமுத்திரத்தில் வந்திறங்குவார் களென்றும் ஹூஸ்டனில் உள்ள தளக் கட்டுப்பாட்டு

### அணு உலைபற்றிய பிரச்னை

வீரர்கள் சந்திரத் தரையில் நிறுவுவதற்காகத் தம்முடன் எடுத்துச்சென்ற சிறிய அளவிலான அணு உலையொன்றை திருப்பிக்கொண்டுவருகிறார்கள் கலம் மீண்டும் பூமியின் காற்று மண்டலத்துக்குள் நுழையும் போது இந்தக்கருவி எவ்வாறு இயங்கும் என்பது பற்றிய பிரச்னை இப்பொழுது விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது, அநேகமாக இந்த உலையும் இதரக்கருவிகளும் பூமண்டலத்துக்குள் கலம் நுழைவதற்கு முன் விண்வெளியில் வீசி எறியப்படலாம் என்று கருதப்படுகின்றது.

அப்பலோ- 13 வீரர்கள் பூமிக்குத் திரும்புவதற்காக முதலில் அவசரமாக சந்திரனைச் சுற்றிவலம் வந்தார்கள். சந்திரனின் இருள் பகுதிக்கு கலம் சென்றபொழுது ஹூஸ்டனில் பலத்த பரபரப்பு நிலவியது. இந்தப் பரபரப்பு 25 நிமிடங்கள் நீடித்[illegible]. இருள் பகுதியிலிருந்து வெளிப்பட்டதும் அமைதியேற்பட்டது அதன் பின் வீரர்கள் சந்திரக் கலதி லுள்[illegible] த்து பூ[illegible] பட்டார்கள்.

[illegible] நொருங்கியது. அப்பலோ 12 வீரர்கள் சந்திரனில் அமைத்துவிட்டுவந்த அதிர்வுகளைப் பதியும் கருவி இதனை பூமிக்கு அறிவித்தது. முந்திய பயணங்களின் போது இவ்வாறு சட்டர்ன்கணை சந்திரனில் யே ய் விழுந்தபடியால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### வீரர்கள் அமைதி

அப்பலோ-13 கலத்தில் திடீரென ஏற்பட்ட கோளாறு விண்வெளி கட்டுப்பாட்டதிகாரிகளுக்குப் பெருத்த கவலையை அளி[illegible]

மிகவும் கவலை கொண்டிருக்கிறார். அப்பலோ-13 கலத்தில் பூமியை நோக்கி விரைந்துகொண்டிருக்கும் வீரர்கள் எங்கு இறங்குவார்கள் என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை.

### பிரான்ஸ் உதவும்

அப்பலோ-13 வீரர்கள் அத்லாண்டிக் சமுத்திரத்தில் இறங்கினால் அவர்களை மீட்பதில் பிரஞ்சு கடற்படையும் உதவும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்து சமுத்திரத்தில் இறங்கும் பட்சத்தில் பிரிட்டன் உதவி புரியும் என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்சன் அறிவித்திருக்கிறார்.

விண்வெளியில் ஆராய்ச்சிகளில் ஈடுபடும் வீரர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜூன் 7ல் ஆட்சிமன்றத்தில் இருப்பாராம் சுந்தரர்!

### நீதிமன்றத்தில் கூறினார்



ஜூன் மாதம் 7-ம் திகதி திரு. சி. சுந்தரலிங்கம் எங்கிருப்பார்? நான்? ஆட்சிமன்றத்தில இருப்பேன் என்று அவரே சொன்னார்.

இன்று சாவகச்சேரி மாஜிஸ்டிரேட்கோர்ட்டில் நடந்த வழக்கொன்றில் திரு. சி. சுந்தரலிங்கம் வழக்குரைஞராக ஆஜராகியிருந்தார். வழக்கை விசாரித்த மாஜிஸ்டிரேட் திரு கே. விக்னராஜா, ஜூன் மாதம் 7-ம் திகதி வழக்கை ஒத்திபோட்டார். காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரான, வழக்கறிஞர் திரு. சி. சுந்தரலிங்கம் அவசர அவசரமாகத் தனது டைரியைப் புரட்டிப் பார்த்துவிட்டு, 'ஜூன் 7-ம் திகதி தான் ஆடசிமனறத்திற்கு செல்ல வேண்டியிருப்பதால் தனக்கு வசதியான இன்னொரு நாள் தவணை தரும்படி' மாஜிஸ்டிரேட்டிடம் கேட்டபோது, நீதிமன்றத்தில் சிரிப்பொலி கிளம்பியது.

மாஜிஸ்டிரேட ஜூன் 6-ம் திகதி வசதியான நாளா? என்று அடுத்து கேட்டபோது, 6-ம் திகதி கொழு

(4-ம் பக்கம் பார்கக)

## உயிர்ப்பாதுகாப்பு அளிப்பதாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பூமியை நோக்கிப் புறப்பட்டுள்ள அப்பல்லோ-13 வீரர்கள் பத்திரமாக இருப்பதாகவும், வரும் வெள்ளிக்கிழமை பசிபிக்சமுத்திரத்தில் வந்திறங்குவார்களென்றும் ஹூஸ்டனில் உள்ள தளக் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள்.

கட்டளைக் கலத்தில் திடீரென்று ஏற்பட்ட கோளாறின் காரணமாக அப்பல்லோ-13 வீரர்கள் பூமிக்குத் திரும்பிவர நேர்ந்தது. பூமிக்குத் திரும்புவதற்கான ரொக்கட்டை வெடித்த சில நிமிடங்களில் கலத்தில் கரியமில வாயு நிறைந்துவிட்டதாக வீரர்கள் அறிவித்தனர். அதனை அவசரமாகத் திருத்திக்கொள்வதற்கான யோசனைகளைத் தெரிவித்தார்கள். எச்சரிக்கை பல்புகள் எரிந்ததன் மூலம் இதனை வீரர்கள் அறிந்தார்கள். மிகவும் பாரதூரமான பிரச்னையாக இருக்குமென்று கருதப்பட்ட இது, சுலபமாகத் தீர்க்கப்பட்டுவிட்டதாக இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது கலம் பூமியை நோக்கி சரியான பாதையில் வந்துகொண்டிருக்கிறது. வெள்ளிக்கிழமை பிற்பகல் பசிபிக்சமுத்திரத்தில் வந்திறங்குவதற்கு முன்மணிக்கு 39730 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று மண்டலத்திற்குள் அப்பல்லோ-13 வந்து நுழையுமென்று கருதப்படுகிறது.

## பரிசோதனை நடத்திப்பார்த்தனர்

கட்டளைக்கலத்தில் கரியமிலவாயு நிறையத்தொடங்கிவிட்டதாக தளக்கட்டுபாட்டு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தவுடன். இந்த நிலைமை நீடித்தால் வீரர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துபற்றி விஞ்ஞானிகள் பூமியில்பரிசோதனை நடத்திப்பார்த்தார்கள். கலத்தில் இருக்கக்கூடிய கரியமிலவாயுவின் அளவைவிட மும்மடங்கு கரியமிலவாயுவைக்கொண்டு பரிசோதனை நடத்திய விஞ்ஞானிகள், இந்தக் கரியமிலவாயுவினால் வீரர்களுக்கு ஆபத்து ஒன்றுமில்லையென்று அறிவித்தார்கள்.

## முதல்தடவையாக களைப்பு அடைந்தனர்

சந்திரனிலிருந்து கலம் சுமார் 8000 கிலோமீட்டர் தொலைவிருந்தபொழுது பூமிக்குத் திரும்புவதற்கான ரொக்கடடை தீர்த்து வீரர்கள் பூமியை நோக்கிப்புறப்பட்டனர் கரியமிலவாயு பிரச்னை தீர்க்கப்பட்ட பின்னர் வீரர்கள் களைப்பு அடைந்திருக்கும் அறிகுறி முதல்தடவையாகத்தெரியவந்ததாகத்தளக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் கூறினார்கள. உறக்கம் கொள்ளாமல் இருந்து விட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் வீரர்கள சிறிதுகண் அயர்வதற்குமுயற்சி செய்வதாகவும் அறிவிக்கப்பட்டன. இருவீரர்கள உறங்க முயல்வதாகவும் மூன்றுமவர் விழிப்போடு நிலைமையை அவதானிப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

ருந்து வெளிப்பட்டதும் அமைதியேற்பட்டது. அதன்பின் வீரர்கள் சந்திரக் கலதிலுள்ள ரொக்கட் ஒன்றைதீர்த்து பூமியைநோக்கிப் புறப்பட்டார்கள்.

இந்த ரொக்கட் எதிர்பார்த்தபடி வெடிக்குமா என்ற சந்தேகம் முதலில் இருந்தது. ஆனால் ரொக்கட் வெற்றிகரமாக வெடித்ததில் தளக்கட்டுப்பாட்டதிகாரிகள் திருப்தியடைந்தார்கள்.

ரொக்கட் வெடித்ததும் கலம் மணிக்கு 2500 கிலோ மீட்டர் வேகத்தில் பூமியை நோக்கிப் புறப்பட்டது.

### கோளாறு

கட்டளைக்கலத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு பிராணவாயு கிடைப்பதில் சங்கடம் ஏற்பட்டது. எரி நட்சத்திரத் தாக்குதலின் காரணமாக இந்தக் கோளாறு ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது.

கட்டளைக்கலத்தில் பிரச்னை ஏற்பட்டதால் வீரர்கள் ஒருவர் மாறி ஒருவர் சந்திரக் கலத்துக்குள் போய் இருந்துவிட்டு வருகிறார்கள். அப்பலோ-13 பூமியை அண்மியதும் காற்றுமண்டலத்துக்குள் நுழைவதற்குமுன் சந்திரக்கலமும், இதர பகுதிகளும் கழற்றிவிடப்படும்.

கட்டளைக்கலத்தில் இன்னும் போதுமான பிராணவாயுவும், தண்ணீரும், மின்சக்தியும் இருப்பதாக தளக்கட்டுப்பாட்டதிகாரிகள் கூறினார்கள்.

### சட்டர்ன்-5 ஏவுகணை

அப்பலோ -13 கலத்தை விண்வெளிக்கு எடுத்துச்சென்ற சட்டர்ன் 5 (சனி) ஏவுகணை அப்பலோ 13 க்கு முன்பதாகவே சென்று சந்திரத் தரையில் விழுந்து

### வீரர்கள் அமைதி

அப்பலோ-13 கலத்தில் திடீரென ஏற்பட்ட கோளாறு விண்வெளி கட்டுப்பாட்டதிகாரிகளுக்குப் பெருத்த கவலையை அளித்திருக்கிறது. என்றாலும் கலத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் ஜேம்ஸ் லொவல், ஃபிரெட்ஹெய்ஸ், ஸ்விகார்ட் ஆகிய மூவரும் வெகு அமைதியாக தமது கடமைகளைச் செய்து வருகிறார்கள். கலத்தில் தானே இயங்கும் தன்மையில் கோளாறு ஏற்பட்டிருப்பதால் வீரர்கள் தாமே கலத்தை இயக்குகிறார்கள். ஏற்கனவே இடம்பெற்றுள்ள பல விண்வெளி பிரயாணங்களிலும் ஏற்பட்டிராத மிகவும் சிக்கலான ஒரு நிலைமை இந்த வீரர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கலத்தில் கோளாறு ஏற்பட்டதால் அதனை அதிதீவிர வேகத்துக்குட்படுத்தி பூமிக்குத் திருப்புவதுபற்றி கட்டுப்பாட்டதிகாரிகள் முதலில்எடுத்த தீர்மானத்தைக் கைவிட்டுள்ளனர். வீரர்கள் வெள்ளிக்கிழமையன்று பூமிக்குத் திரும்புவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### அமெரிக்கா முழுவதும் பிரார்த்தனை

வீரர்கள் மூவரும் பத்திரமாக பூமிக்குத் திரும்ப வேண்டுமென அமெரிக்கா முழுவதும் உள்ள மக்களைப் பிரார்த்தனைகளில் ஈடுபடும்படி அமெரிக்கா காங்கிரஸ் சபை ஒரு தீர்மானத்தின் மூலம் கேட்டுக்கொண்டிருக்கின்றது. வீரர்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமை குறித்து அதிபர் நிக்ஸன்

களில் ஈடுபடும் வீரர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

மாஜிஸ்டிரேட் ஜூன் 6-ம் திகதி ... நாளா? என்று அடுத்து கேட்டபோது, 6-ம் திகதி கொழு

(4-ம் பக்கம் பார்க்க)

# உயிர்ப்பாதுகாப்பு அளிப்பதாக ரஷ்யா உறுதி

## பசுபிக்குக்கு சோவியத் கப்பல்கள்!

மாஸ்கோ, ஏப். 15

**பூமியை நோக்கி வந்துகொண்டிருக்கும் அப்பலோ-13 வீரர்கள் மூவருக்கும் உயிர்ப்பாதுகாப்பளிப்பதற்கு சோவியத் ரஷ்யா முன்வந்துள்ளது.**

சோவியத்பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜின் அமெரிக்க ஜனாதிபதி திரு. றிச்சார்ட் நிக்ஸனுக்கு அவசரச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அபாயகரமும் இக்கட்டும் நிறைந்தநிலைக்குள்ளிருக்கும் விண்வெளி வீரர்களுக்கு சோவியத் ரஷ்யா . உயிர்ப் பாதுகாப்பு அளிக்கத் தயாராக இருப்பதாக அச்செய்தியில் திரு. கொஸிஜின் உறுதி தெரிவித்துளளார்.

விண்வெளி வீரர்கள் எவ்வித ஆபத்துமின்றி பூமி வந்து சேரவேண்டுமென்பதையே நாம் விரும்புவதாகவும் ரஷ்ய மக்களும் இதையே விரும்புகிறார்களென்றும் அச் செய்தியில் ரஷ்ய பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

விண்வெளிவீரர் மூவரும் பாதுகாப்பாக பூமிவந்து சேர முடியுமான அளவு உயிர் பாதுகாப்பு அளிக்கும் உதவியை ரஷ்யாசெய்யும் என்று அச்செய்தியில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

# சித்தவைத்தியம் படிக்க சமஸ்கிருதமா?

## வைத்திய மாணவர்கள் கடும் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்க ஆயுள்வேதக் கல்லூரியில் சித்தவைத்தியம் படிக்க, சமஸ்கிருதம் அவசியமா? இல்லையா? என்பதுபற்றி, ஆயுள்வேதக் கல்லூரியிலும், ஆயுள்வேத, சித்த வைத்தியக் கலாநிதிகள், மாணவர்கள் மத்தியிலும் பெருத்த அபிப்பிராய பேதங்கள் தோன்றியுள்ளன.

அரசாங்க ஆயுள்வேதக் கல்லூரியில் இதுவரைகாலமும் சித்தவைத்தியம் தமிழில்தான் போதிக்கப்பட்டு வருன்கிறதுஇனி, சித்தவைத்தியம் படிக்கும் மாணவர்களுககு சமஸ்கிருதமும் கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும் என்ற ஆயுள்வேதக கல்லூரி மேல்மட்ட அதிகாரிகள் தீர்மானித்திருககின்றனர்.

சித்த வைத்திய மாணவர்கள் சமஸ்கிருதமும் பயில வேண்டும் என்பதை, ஆயுள்வேதக் கல்லூரித் தமிழ் மாணவர்கள் வன்மையாக எதிர்த்துள்ளனர். ஆயுள்வேதக் கல்லூரியில் தமிழ்ப் பிரிவை நிரந்தரமாக மூடவிட மேற்கொள்ளப்படும் முதல் மறைமுகநடவடிக்கைதான் இது என வைத்தியக் கலாநிதி அம்பலவாணர் கெங்காதரன் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

சித்தவைத்தியம் பற்றிய மூல நூல்களும் அரியமருந்து முறைகளும் தமிழ் மொழியிலேயே இருப்பதால், சமஸ்கிருதம் அவசியமில்லை என மாணவர்கள கருதுகின்றனர்.

மாணவர்கள காட்டிய எதிர்ப்புணர்ச்சியின் விளைவாக. ஆயுளவேத ஆணையாளர், ஆயுள்வேதக் கல்லூரி ஆஸ்பத்திரி சபையினரின் உதவியுடன் சித்தவைத்தியத்துக்கு சமஸ்கிருதம் அவசியமா? இல்லையா? என்பது பற்றி ஆராய நான்கு வைத்தியர்கள் அடங்கிய உபசபை யொன்றை நியமித்தார்.

அந்தச்சபையில், வைத்திய கலாநிதிகள் ஆ. கனகரத்தினம், எஸ். அருணாசலம், ஜெயகோபாலரத்தினம், எஸ் கே. வடிவேலு ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இந்தச்சபை, சித்தவைத்தியத்துக்கு சமஸ்கிருத மொழி அவசியம்தான் என சிபார்சு செய்திருககிறது.

ஆனால் சித்தவைத்திய மாணவர்களோ, இந்த உபசபைநியமிககப்பட்ட முறையையும், அதன் இறுதி முடிவையும் வன்முறையாக எதிர்த்திருககின்றனர்.


வெங்காயப் பூடு

பெரிதாய் வளர்வதற்கு

களைகளை

நீக்கும்



றம்றெட்

உபயோகியுங்கள்

வினியோகஸ்தர்.

செல்வலஷ்மி

38, 39, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், சங்கானை

பரந்தன். கண்டிவீதி, சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள சேல்ஸ்மென் தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும். லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி. 2107

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 'மர்சி பேர்குசன்' உழவுயந்திரம் 25 ஸ்ரீ 624 உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: பத்மநாதன், பெரிய அரசடி, சாவகச்சேரி 2106

### சோதிடம்

ஜனன ஜாதகக்குறிப்பு சுத்தமான முறையில் கணிதம் பண்ணிப் பலன்கள் எழுதிக் கொடுக்கப்படும். மற்றும் சோதிட சம்பந்தமான சகல விஷயங்களுக்கும் நேரில் சந்திக்கலாம். காலை 8 மணி வரை வாசஸ்தலத்திலும் அதன் மேல் சோதிடநிலையத்திலும் சந்திக்கலாம். (வல்வை வைத்தீஸ்வரன் கோவில் தேவஸ்தான ஆஸ்தான சோதிடன் அப்பாஜி) மகன் கார்வண்ணதாஸ்- அப்பாஜி சோதிடாலயம், ஊறணி, வல்வெட்டித்துறை, வாசஸ்தலம் சிவபுர வீதி, வல்வெட்டித்துறை. 2105

## பருத்தித்துறை வங்கி வென்றது

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கோஷ்டிக்கும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டியில் இலங்கை வங்கிக் கிளை மகத்தான வெற்றியீட்டியது.

நெல்லியடி மத்தியமகா வித்தியாலய மைதானத்தில் நடந்த இப் போட்டியில் வங்கிக்கோஷ்டிக்கு, மேற்படி வங்கி மனேஜர் திரு. வீ. எஸ். கந்தப்புவும், வைத்தியசாலைக் கோஷ்டிக்கு டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பியும் தலைமைதாங்கினர்.

## ஆணையாளர் உத்தரவுவேண்டும்

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு முகாமில் கடந்த மாதம் ஏற்பட்டதாகக் கூறப்படும் சீமெந்துசாலை தீவிபத்து சம்பந்தாக சந்தேகத்தின் பேரில் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட 10 வீரர்களையும் திரும்பவும் வேலைக்கு அழைப்பதுபற்றி விஸ்வமடு விவசாயப்படை முகாம்பொறுப்பதிகாரி திரு என் விஸ்வநாதனைக் கேட்டபோது விவசாயப்படை ஆணையாளர் தனக்கு உத்தரவிட்டால் தான் மேற்படி வீரர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதாகக் கூறினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 16—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**334 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ: அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்கண்டுபிடிப்புகள்.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வீணை. 7-45 விளையாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி. 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## மிருசுவில் கிராமசபை கேள்விப்பத்திர விளம்பரம்

மிருசுவில் கிராமசபையால் 1. "அடிவளைந்தான் ஒழுங்கை" 2. "மன்னன் குறிச்சி கோவில் ரேட்" 3. "ஆலடிப் பிள்ளையார் கோவில் கிணறு" வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. மேற்படி வேலைகளுக்கு 26-4-70 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி வரை கேள்வி விண்ணப்பங்கள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். 23-4-70 பகல் 12-00 மணி வரை கேள்விப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்களை கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்:
சின்னத்தம்பி பாலசிங்கம் J. P.
அக்கிராசனர்,
கிராமசபை,
மிருசுவில்.
2228

## வலி-மேற்கு பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உப்பளம், கல்லுண்டாய் பனை ஓலை கேள்வி விளம்பரம்

வலிகாமம் மேற்குப் பல நோக்கக் கூட்டுறவுச் சமாச கல்லுண்டாய் உப்பளத்திற்கு 1970-ம் ஆண்டுக்கு 15,000 பனை ஓலைகள் தேவைப்படுகின்றன.

நிபந்தனைகளுக்கு அமைய கொடுக்க விரும்புவோர் சமாசத்தில் இதற்காக உள்ள பத்திரத்தைப்பெற்று 29-4-70-ம் திகதிக்கு முன்பு பதிவுத்தபாலில் அல்லது நேரில் விண்ணப்பிக்கவும்.

தலைவர்
வலி-மேற்கு ப. நோ. கூ. ச. சமாசம், சங்கானை.
2222

## இணைப்பு முயற்சிகள் எதுவுமில்லை

புதுடில்லி, ஏப். 15

ஆளும்காங்கிரஸ் கட்சியும் சின்டிக்கேட்காங்கிரஸ் கட்சியும் ஒன்றுக இணைவதற்கான முயற்சிகள்நடைபெறவில்லை என சின்டிக்கேட் காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சி பிளவுபடுமுன் காங்கிரஸ் கட்சியில் அங்கம்வகித்த இந்திரா ஆதரவாளர்கள் கட்சியின் பலவீனத்திற்கே உதவி வந்தார்கள் அவர்கள் பிரிந்து சென்ற பின் கட்சி உண்மையாக உறுதியும், பலமும் அடைந்து உள்ளது என மேலும் கூறினார்.

தற்போதைய இந்திராவின் ஆட்சியைப் பற்றி கூறுகையில் இந்திரா காந்தி ஜனநாயகத்திற்கு விரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றூர்.

இத்தகைய நடவடிக்கை தொடரும் பட்சத்தில் அவரது ஆட்சி கவிழும் என்பது திண்ணம் என்றூர்.

## ஆசிரியர் மீது கண்காணிப்பு?

பருத்தித்துறை, புதன்

அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடுவதில் மறைமுகமாக வேனும் ஈடுபடும் ஆசிரியரை இரகசியப் பொலிஸார் கண்காணித்துவருவதாகத் தெரிகிறது. சில ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீலங்க ஜாதிக குருசங்கத்தைச் சேர்ந்த 200க்கும் அதிகமான ஆசிரியர் தேர்தலில் தீவிரமாகக் கலந்துகொண்டதைத் தொடர்ந்து வேலைநீக்கம் செய்யப்பட்டதன் விளைவாக அவர்கள் இம்முறையும் தேர்தல் களத்தில் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டுள்ளதாகச் சந்தேகிக்கும் கல்விப்பகுதி இவர்கள் மட்டுமின்றிப் பொதுவாகத் தேர்தல் வேலைகளில் ஈடுபடும் சகல ஆசிரியர் மீதும் தொடர்ந்து கண்காணிப்பு நடத்தவேண்டுமென்று இரகசியப் பொலிஸாரைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. இதன் எதிரொலியாகச் சில ஆசிரியர் சங்கத் தலைவர்களும், உத்தியோகத்தரும் வடபகுதியிலுள்ள சகல ஆசிரியருக்கும் இந்நிலைமையை எச்சரிக்கையாக அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

பிஸ்கால் இல. 112/69

## பிஸ்கால் கொம்மிசன் விற்பனை

வழக்கு இலக்கம். 2259

வவுனியா பிரதி பிஸ்கால் ஆபீசில் 10 ஏப்ரல் 1970

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் கனகசபை மகள் இராசம்மா அல்லது இராஜேஸ்வரி கொழும்பு. தற்போது இலக்கம் 4 புளும்றி அவினியு கிறேற் படோ செம்ஸ்போட் ஏசெக்ஸ் இங்கிலாந்து. அவவின் தத்துவக்காரன் கனகசபை நாகலிங்கம் இலக்கம் 22/1, புல்லேர்ஸ் லேன், கொழும்பு 7.

வழக்காளி

விரோதமாக

பஸ்தியாம்பிள்ளை யோசேப் பயஸ் முன்னுள் உபதபால் கந்தோர் கட்டிடம், பிரதானவீதி, மாங்குளம் தற்போது சந்தனமாதா கோவிலடி 1-ம் ஒழுங்கை, பண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம்.

எதிராளி

இதன் கீழ் காணப்படும் ஆதனத்தின் மேற்சொல்லிய வழக்கில் எதிரிக்குடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1970-ம் ஆண்டு மே மாதம் 15-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு காணியில் பிரசித்த வெந்தீசில் விற்கப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது. அதாவது.

வடமாகாணம் வவுனியா மாவட்டம் வவுனியா வடக்கு மேற்பற்று தெற்கு உடையாவூர் மாங்குளத்திலுள்ள உடையாவூர்காடு என்னும் ரூபா 75,000/ம் பெறுமதியான ஆதனம் இதன் விஸ்தீரணம் 3 றூட் 36 பேச்செஸ்(ஏ. 0. றூட். 3. பேச் 36.) உபதபாற்கந்தோர் இருக்கும் ஓட்டு வீடும் நான்கு ஓலை வீடுகளும், கிணறு, செய்பயிர், வான்பயிர் அடங்கலாக.

இதன் எல்லைகள்

கிழக்கும் தெற்கும்: வீ. எக்ஸ். பீ. பறநந்துவின் ஆதனம்.

மேற்கு: ரேட்டு.

வடக்கு: பொதுவேலைப் பகுதியின் ஆதனமும், மறுபேறும்.

வவுனியா காணிப்பதிவகத்தில் பீ. 10/259 இலக்க இருமடித்தாளில் பதியப்பட்டது.

ஈட்டு முதல் 11,104/27 சதம்.

வட்டி: 17-10-66 தொடக்கம் 25-10-68 வரை ரூபா 6,000/க்கு 12% வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் அறவிடும் வரை 5% வீத வட்டி.

பிஸ்கால் கட்டணமும்

# பண்டித பாலபண்டித பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 1969-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடத்திய பரீட்சைகளின் பெறுபேறுகள் வருமாறு:

**தமிழ்ப் பண்டித பரீட்சை**

க செல்வவிநாயகம்பிள்ளை ஞுவில். மூன்றும் பிரிவு.

சி. யோகம்மா, அரியாலை, யாழ்ப்பாணம் -பூரணப்படுத்தியவர்.

க. பரமேசுவரி, தெல்லிப்பழை -பூரணப்படுத்தியவர்.

**தமிழ் பாலபண்டித பரீட்சை**

க. முத்துவேலு, வாணி கலைக்கழகம், கரவெட்டி -மூன்றும்பிரிவு.

ஐ. சத்தியஞானலிங்கம், வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம் -மூன்றும்பிரிவு.

சீ. அன்னலட்சுமி, வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம் -மூன்றும்பிரிவு.

கி. இராசநாயகி, வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம் மூன்றும்பிரிவு.

மா. கருணாநிதி, வாணி கலைக் கழகம், கரவெட்டி- நூனசித்தி, பாடவகை 2,

மு. சிவசோதி, வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம் -பூரணப்படுத்தியவர்.

க. தில்லையம்பலம், வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம்- பூரணப்படுத்தியவர்.

வா. யோகசக்தி, வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம் -பூரணப்படுத்தியவர்.

பொ. சூரியபகவதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்-பூரணப்படுத்தியவர்.

க. விஜுசித்தம்பி, கொடிகாகம்.

**தமிழ்ப் பிரவேச பரீட்சை**

க. தில்லைநாயகி, சாவகச்சேரி-மூன்றும்பிரிவு.

ஆ. மகேந்திரலிங்கம், மானிப்பாய்-மூன்றும்பிரிவு.

த. பண்டரிநாதன், வட்டுக்கோட்டை - பூரணப்படுத்தியவர்.

**சமஸ்கிருத பண்டித பரீட்சை**

ப. பாலசுப்பிரமணியசர்மா நல்லூர், யாழ்ப்பாணம்-மூன்றும்பிரிவு.

ந. பாலசுப்பிரமணிய சர்மா யாழ்ப்பாணம்-மூன்றும் பிரிவு.

சி. ஜோதீந்திர சர்மா நல்லூர், யாழ்ப்பாணம் - மூன்றும்பிரிவு.

பா. அருணசலம் நல்லூர் யாழ்ப்பாணம்-பூரணப்படுத்தியவர்.

## சேவைநலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், வியா.

காரைநகர் இந்துக்கல்லூரி அதிபராக கடந்த 25 ஆண்டுகளாக கடமையாற்றிய திரு ஆ, தியாகராசாவுக்கு காரைநகர் மக்களால் நாளை காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் சேவைநலம் பாராட்டுவிழா நடாத்தப்படவுள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பல அறிஞர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவர்.

## கூட்டு முன்னணி அபேட்சகர்

பருத்தித்துறை, புதன்

உடுப்பிட்டித் தொகுதியில் கூட்டு முன்னணிக் கட்சிகள் சார்பில் போட்டியிடும் அனுமதிச்சீட்டு தமக்குக் கிடைத்துவிட்டதாக திரு. பொன். குமாரசாமி நமதுநிருபரிடம் கூறினார்.

## "மீண்டும் வற்புறுத்துவேன்'

சென்னை, ஏப். 15

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்கும்படி பிரதமர் இந்திராகாந்தியை மீண்டும் வற்புறுத்தப் போவதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு கருணாநிதி திருச்சியில் நிருபர்களுக்களித்த பேட்டியின் போது கூறினார்.

## யானைகளால் மக்கள் பீதி

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு பகுதியில் கடந்த ஒருவார காலமாகக் காட்டு யானைகள் அட்டகாசம் செய்து வருகின்றன. சமீபத்தில் விஸ்வமடு பகுதியில் உள்ள இளம் விவசாயியின் வாழைத் தோட்டத்தை யானைக் கூட்டம் ஒன்று சேதப்படுத்தியுள்ளது. இரவு நேரங்களில் விஸ்வமடு வீதிகளால் செல்லும் எந்த வாகனங்களும் யானைக் கூட்டங்களால் மறிக்கப்படுகின்றன. இது குறித்து இப்பகுதி மக்களும் பீதியடைந்துள்ளனர்.

## உப உணவால் லாபம்

விஸ்வமடு, புதன்

இம்முறை விஸ்வமடு படித்த வாலிபர் குடியேற்றப்பகுதியில் வாழும் அதிகமான விவசாயிகளுக்கு உப உணவு பயிர் செய்கையால் அதிக லாபம் கிடைத்துள்ளது. சென்ற ஆண்டு உப உணவு உற்பத்தியில் நஷ்டத்துக்குள்ளானவர்கள் இம்முறை திருப்தியடைந்துள்ளனர்.

## "பயன்கருதாத சேவைவேண்டும்'


சுழிபுரம், புதன்

'பலனை எதிர்பாராது கழக சேவையில் ஈடுபடுபவர்களுக்கு இறைவன் அருள் தானகவே கிடைக்கும்" என பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூக நிலையத் தனாதிகாரியாயிருந்து கொழும்பில் உத்தியோக நியமனம் பெற்றுச் செல்லும் திரு. சிவலிங்கத்திற்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் பேசிய நிலையத்தலைவர் திரு எஸ் மாணிக்கம் கூறினார்.


ராஜா (யாழ்ப்பாணம் தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் தங்கவேலு நடித்த
ஹரிச்சந்திரா

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கே ஆர் விஜயா நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி நடித்த
திருடன்

யாழ். வின்ஸர் திரையில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




பயிர்த் தொழிலின் அதிசய கண்டுபிடிப்பு ....

## 'அல்கதீன்' குழாய்



பிற உற்பத்திப் பொருள்களும் இப்பணிகளையெல்லாம் செய்தல் கூடும். ஆனல், அல்கதீன் கூடுதலாகச் செய்வது என்ன? பயிர்த் தொழிலில் எல்லா வகையிலும் முன்னேற்ற வழியில் முன் நிற்பதுதான்.

நீர்பாய்ச்சும் பொறியியலாளர், பயிர்த் தொழிலாளர், தோட்ட முதலாளிகள், கொள்வனவு செய்யும் முகவர்கள் ஆகிய எல்லோருமே குறைகள் உண்டா எனக் கூர்ந்து அவதானிப்பவர்கள். அவர்கள் யாவருமே இன்று கிடைக்கும் குழாய்களுள் மிகச் சிறந்தவை என ஒரே முகமாக நீர் பாய்ச்சும் பணிகளுக்கெனத் தேர்ந்தெடுத்திருப்பது அல்கதீன் குழாய்களே. நீளம், குறைந்த எடை, இலகுவான இணைப்பு முறை, மலிவு, இடமாற்றத்துக்கு எளிமை.................... அத்துடன் எளிதில் நொறுங்காத்தன்மை ஆகிய இவைதான் காரணங்கள்.

'அல்கதீன்' - குழாய்களுள்ளே முதன்மையானது.

CIC கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிற்றெட்.

தபால் பெட்டி 352 - கொழும்பு.


சதம்.

வட்டி: 17-10-66தொடக்கம் 25-10-68 வரை ரூபா 6,000/க்கு 12% வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் அறவிடும் வரை 5% வீத வட்டி.

பிஸ்கால் கட்டணமும் பவுண்டேச்சும் அறவிடப்படும்.

ஆ. குணநாயகம்,
மேலதிக பிரதி பிஸ்கால்.
2105

## கருணாநிதிக்கு சஞ்சீவையா பாராட்டு

சென்னை, ஏப்ரல் 15

தமிழ்நாடு முதல் அமைச்சர் கருணாநிதி தொழிலாளர்களுக்கு செய்த சேவை அபரிதமானது, அற்புதமானது என டில்லி தொழிலாளர் நல மந்திரி சஞ்சீவையா கூறினார்.

இவ்வாறு சென்னை திருவல்லிக்கேணியில் தொழிலாளர் நல ஆஸ்பத்திரியை திறந்துவைத்துபேசிய சஞ்சீவையா கூறினார்.

தொடர்ந்து பேசுகையில், 'நாட்டின் தேசிய செல்வ விருத்திக்கு உழைப்பவர்கள் தொழிலாளிகள். அவர்களை வெறும் கூலிகள்என எண்ணி விடலாகாது. தொழிலாளர்களின் பிரச்னைகளை தீர்ப்பசற்கான வழிவகைகளை மேற்கொள்ளுவேன்''

''தொழிற்சங்கம் இல்லாத தொழிலாளர்கள் விவசாயிகளே. ஆகவே அவர்களின் பிரச்னைகளை, கஷ்டங்களை முதலில் கவனிக்கவேண்டும். அதே நேரம் உங்களிடமிருந்து நாடு அதிகம் எதிர்பார்க்கின்றது'' என்றார்.

விவசாயிகளிடம் நிரம்பிய அன்புகொண்டவர் கருணாநிதி. அவர் விவசாயிகளுக்கு செய்த தொண்டு அபரீதமானது. என முதலமைச்சர் கருணாநிதிக்கு பாராட்டுரை வழங்கினார்.

## இசைமேதை மறைவுக்கு அனுதாபம்

தாவடி, புதன்

இசைமேதை மகாராஜபுரம் விஸ்வநாதஐயரின் மறைவு குறித்து, திருநெல்வேலி நந்தி இசைமன்ற அங்கத்தவர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனம் அனுஷ்டித்து தமது அனுதாபத்தைத் தெரிவித்தனர். ஐயருடைய மறைவு இசையுலகிற்குப்பேரிழப்பு என்று நந்தி இசைமன்றப் பொறுப்பாளர் திரு. எம். என். செல்லத்துரை பேசும்போது குறிப்பிட்டார்.

மா யாழ்ப்பாணம்-மூன்றும் பிரிவு.

சி. ஜோதீந்திர சர்மா நல்லூர், யாழ்ப்பாணம் - மூன்றும்பிரிவு.

பா. அருணசலம் நல்லூர் யாழ்ப்பாணம்-பூரணப்படுத்தியவர்.

ச, பாலகிருஷ்ண சர்மா நல்லூர், யாழ்ப்பாணம்-புனர் நூனசித்தி,பாட 4.

### சமஸ்கிருத பாலபண்டித பரீட்சை

ச, ஸ்ரீநிவாசஐயர், நல்லூர் யாழ்ப்பாணம் - இரண்டாம் பிரிவு.

சா. தணிகாசலேசுவர சர்மா, யாழ்ப்பாணம்-மூன்றும்பிரிவு.

சு. ஸ்ரீதரசர்மா, யாழ்ப்பாணம்-மூன்றும்பிரிவு.

### சமஸ்கிருத பிரவேச பரீட்சை

தி. பொன்னம்பலவாணர் நல்லூர், யாழ்ப்பாணம், இரண்டாம்பிரிவு.

கி. ஹரகுகவரத சர்மா நல்லூர், யாழ்ப்பாணம்-மூன்றும்பிரிவு.

ச. நாராயணசர்மா, நல்லூர், யாழ்ப்பாணம்-மூன்றும்பிரிவு.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
என். டி. ராமராவ்-பத்மினி
நடித்த
லவகுசா
(கேவா கலர்)

ஸ்ரீ கலிங்கன
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
மாடப்புரு

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Poya, pre poya 4 shows
Michael Connors,
Dorothy Provine
in
KISS THE GIRLS
&
MAKE THEM DIE
(adults only)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Poya & Public holidays
4 Shows
Christopher Lee
in
DRACULA
(Adults only)

திருடன்

யாழ். வின்ஸர் திரையில்
புத்தாண்டுப் பரிசாக திரையிடப்படுகிறது
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — பாரதி
மனேகர், நிர்மலா, ஓ. ஏ. கே. தேவர்
ஹரி கிருஷ்ணன்
மற்றும் பலர் நடித்த
தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனதிபதியின் பிராந்தியப் பரிசுபெற்ற வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
ஏ.வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்
தில்லானு மோகனம்பாள

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி
நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
சுபதினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை கம்போடியா எதிர்பார்க்கின்றது

## சண்டை நிலைமை மோசமாவதே காரணம்

நாம்பென், ஏப். 15

கம்போடியா வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை எதிர்பார்க்சின்றது.

கம்போடிய படைகளை எதிர்த்து வடவியட்னும் துருப்புகளும், வியட்காங்கியரும் கடுமையான தாக்குதலில் இறங்கியிருக்கின்றனர்

கம்போடியாவில் இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையில் வெளிநாடுகள் எதிலிருந்தும் நிபந்தனையற்ற முறையில் ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ள கம்போடியா தயாராயிருக்கின்றது என்று கம்போடியாவின் புதிய அதிபர் ஜெனரல் லோல் நொல் அறிவித்திருக்கிறார்.

நேற்று மாத்திரம் கம்போடிய படைகளுக்கும் வியட்காங், வடவியட்னும் படைகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலில் 131 அந்நிய படையினர் கொல்லப்பட்டனர் என்று கம்போடியா அதிகாரிகள் அறிவித்தனர். தங்கள் தரப்பில் 49 பேர் கொல்லப்பட்டதாகவும் அவர்கள்தெரிவித்தனர்

முக்கியமான ஒரு பகுதியில் வியட்காங்கியர் தாக்குதல் ஒன்றைத் தொடங்கியதாகவும் அதனை அரசு படைகள் முறியடித்துவிட்டதாகவும் அவர்கள் கூறினர்.

இதற்கிடையில் திரு. லோவ் நொல்வின் அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டாமென்றும் அதனை எதிர்க்கும்படியும் தமது தோழமை நாடுகளை பதவி நீக்கம்செய்யப்பட்டுள்ள கம்போடியா அதிபர் இளவரசர் நொரடோம் சிகானுக் கேட்டுக்கொண்டிருக்கிறார்

92 வியட்னுமியரை ஜெனரல் லோவ் நொல்வின் படைகள் கொன்று குவித்துவிட்டதாகவும் அவர் குற்றம்சாட்டியிருக்கிறார்.

### மே வங்காளத்தில் தற்கொலை அதிகம்

ஏப். 15

கடந்த ஆண்டுகளை விட 1968ம் ஆண்டு இந்தியாவில் தற்கொலைகள் அதிகரித்துள்ளன மேற்கு வங்காளத்தில் மாத்திரம் 5,744பேர் தற்கொலை செய்துள்ளனர். பம்பாய் மாநிலத்தில் 3,432 பேரும் மைசூரில் 3,038 பேரும் தமிழ் நாட்டில் 5,617 பேரும் தற்கொலை செய்துள்ளனர்.

நாகாலாந்தில்16பேர் மாத்திரம தற்கொலை செய்துள்ளனர். லட்சதீவில் யாருமே தற்கொலை செய்து கொள்ளவில்லை.

இத்தவல்களை ஆட்சிமன்றத்தில் உள்நாட்டு இராஜாங்கமந்திரி திரு. வி. சி. சுக்லா வெளியிட்டார்.

## ஏவுதளம் அமைக்க எகிப்தியருக்கு உதவாதீர்

## இஸ்ரேல் மந்திரி மீண்டும் ரஷ்யாவை எச்சரிக்கிறார்

கெய்ரோ, ஏப். 15

நிலத்திலிருந்து வானத்தைநோக்கிச்சுடும் ஏவாயுதத்தளங்களை அமைப்பதற்கு எகிப்தியருக்கு உதவி புரிவதில் சோவியத் அதிகாரிகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு தயான் சோவியத் யூனியனுக்குமீண்டும் எச்சரிக்கைவிடுத்திருக்கிறார்.

ஏவாயுதத் தளங்களை எகிப்தியருக்கு அமைத்துக்கொடுப்பதில் ஈடுபடும் சோவியத் அதிகாரிகள் இஸ்ரேலியரின் தாக்குதல்களுக்கு இலக்காகலாம் என்பதையே இந்த எச்சரிக்கை சுட்டிக்காட்டுவதாகக் கருதப்படுகின்றது.

இஸ்ரேலியர்நேற்று சூயஸ் கால்வாயின் மத்திய பகுதியிலும், தென்பகுதியிலும் எகிப்தியரின் ராணுவநிலைகள் மீது கடுமையான விமானத்தாக்குதல்களை நடத்தியதாக அறிவித்தனர்.

எகிப்திய தலைநகரில் அதிபர் நாஸருடனும், இதரத் தலைவர்களுடனும் ஆலோசனைகள் நடத்தியபின்னர் அமெரிக்க அதிபர் நிக்ஸனின் உயர்தர ஆலோசகர்களில் ஒருவரும் ராஜாங்க அமைச்சின் உதவிக் காரியதரிசியுமான திரு. சிஸ்கோ இப்பொழுது டெல்அவிவ் போய்ச்சேர்ந்திருக்கிறார். இப்பிரதேசத்தில் அமைதியைப் பாதுகாப்பதற்கு ஐ. நா. பாதுகாப்புச்சபை தீர்மானத்தை அமுல்நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட எல்லாநாடுகளும் உதவ வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

## இந்திரா காங்கிரஸ் தலைவர் வீட்டில் எறிகுண்டு தாக்குதல்

புதுடில்லி, ஏப் 15

கல்கத்தாவில் இந்திரா காந்தி ஆதரவு காங்கிரஸ் தலைவர் திரு. சித்தார்த்த ரேயின் வீட்டிற்குள் புகுந்து இனம்தெரியாத சிலநபர்கள் எறிகுண்டுகளால் தாக்குதல் நடத்தினர்கள்.

தாக்குதல் நடாத்தியவர்கள் யார்என்றுகண்டுபிடிக்க முடியவில்லை. பொலிசார் வருமுன்னே அவர்கள் ஓடித்தப்பிவிட்டார்கள். இரவு சுமார் 9மணியளவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. ஆனல் திரு. ரேயும் அவரது துணைவியாரும் அப்பொழுது புதுடில்லியிலிருந்தார்கள். திரு. ரேயின் காரியதரிசி தாக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

'யாழ்ப்பாணத்தில்

## தொழிற்சாலைகள் நிறுவி வேலைவாய்ப்புஏற்படுத்தலாம்'

தாவடி, புதன்

''எமது நாட்டுக்கு எந்தெந்த விதமான நன்மைகளை நாம்செய்ய முடியுமோ அவற்றைச் செய்யவேண்டும் பொருளாதார அபிவிருத்தியின் மூலம் தான் தமிழ்ப்பகுதியும் தமிழ் இனமும் முன்னேற முடியும். யாழ்ப்பாணத்திலேதொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் வேலைவசதிகள் ஏற்படுத்தலாம்''.

இவ்வாறு, கொக்குவில் மேற்குவராகிஅம்மன் ஆலய முன் முன்றலில் திரு. க. செல்வராஜா தலைமையில் நடைபெற்ற தமிழர் சுயாட்சிக் கழகக் கூட்டத்தில் பேசிய நல்லூர்த் தொகுதி தமிழர் சுயாட்சிக் கழக வேட்பாளர் திரு. அம்பலவாணர் இரத்தினம் குறிப்பிட்டார். காங்கேசன்துறையிலே பெறப்படும் சுண்ணும்புக் கற்களைச், சுட்டு முக்காற்பதமாக்கிப்புகையிரதம் மூலம் காலிக்கு அனுப்பி அங்கு அரைத்துச் சீமெந்தாக்கப் படுவதாகவும் இதைக் காங்கேசன்துறையிலேயே அரைத்துச் சீமெந்தாக்குவதன் மூலம் இங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமென்றும் அவர் சொன்னார். திரு. மு. மகாலிங்கம் பேசும் போது, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முடிசூடா மன்னராக விளங்கிய தமிழரசுக் கட்சியினர் மாவட்ட சபையை நம்பி ஏமாந்தனர் என்றும், மொழியை, மதத்தை, கலாச்சாரத்தைப் பாதுகாத்து தமிழ் நாட்டைப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையச் செய்வதற்கு தமிழர் சுயாட்சிக் கழகம் பாடுபடும் என்றும் சொன்னார்.

திரு. ப. இராசரத்தினம், திரு. ஸ்ரீபதி. திரு. செ. ஞானசுந்தரம். திரு. செ. இரத்தினகோபால் உட்படப் பலர் உரையாற்றினர்.

## ''எனது தீர்க்கதரிசனம் இன்று அவர்களுக்குத் தெரியும்''

— வி. நவரத்தினம்

மண்டைதீவு, புதன்

''எந்த இலட்சியங்களையும் வாக்குறுதிகளையும் முன்வைத்துத் தமிழ்மக்களிடம் நாம் பதவிக்கு வந்தோமோ அவற்றையெல்லாம் நிறைவேற்றும்வரை நாம் எந்த ஓர் அரசாங்கத்திலும் சேரக்கூடாதென்று 1965ம்ஆண்டு பங்குனி மாதம் நான் கூறியதைக் கேட்ட தமிழரசுத் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் என்னை ஒரு புலம்பல் தீர்க்கதரிசி என்று கூறினர். இன்று தான் அவர்களுக்கும் என் தீர்க்கதரிசனம் எப்படியென்று தெரிகிறது. இவ்வளவு காலமும் தேசிய அரசாங்கத்தோடு சேர்ந்திருந்த தமிழரசார் தாம் ஏமாற்றப்பட்டுவிட்டதாக இன்று கூறுகிறார்கள்.''

இவ்வாறு தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் கரம்பொன் காளிகோவிலடியில் நடந்த கழகக் கூட்டத்தில் கூறினர்.

நாரந்தனைக் கிராமசபை உறுப்பினர் திரு. எஸ். கதிரித்தம்பி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு. பி. நிக்கிலாஸ் பேசுகையில் தமிழரசுக்கட்சியின் மூளையென வர்ணிக்கப்பட்ட திரு.வ.நவரத்தினத்தின் மூளை இன்று குழம்பிவிட்டதெனத் தமிழரசுக் கட்சியினர் கூறுகின்றார்கள். ஆனல் அவர்களுக்குத் தெரியுமா? உடம்பின் முக்கிய பகுதியான மூளை குழம்பிவிட்டால் உடம்பின் ஏனைய பகுதிகளும் குழம்பிவிட்டிருக்கும் என்பது உடம்பில் ஏற்பட்ட குழப்பம் தான் இன்று அவர்கள் எல்லா விடயங்களிலும் குளறுபடியாக நடப்பதற்குக் காரணம்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் க. வே. பரமலிங்கம், வே. சி. அம்பிகைபாகன், க. ஐயாத்துரை, ஈழத்துச் சிவகனந்தன், தா. மகேஸ்வரன், க. கனகரத்தினம் ஆகியோருட்படப் பலர் உரையாற்றினர்.

## தெலிங்கானா இறுதிப் போராட்டம் நடத்த முடிவு

ஹைதராபாத், ஏப். 15

தெலிங்கானாப் பிரிவினைக்காக இம்மாதம் 22-ம் தேதி முதல் 12 நாட்களுக்கு இறுதிப்போராட்டம் நடத்துவது என தெலிங்கானா போராட்டக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

ஆந்திராவிலிருந்து தெலிங்கானாவை பிரித்து தனிமாநிலமாக்க வேண்டுமெனக் கோரி இப்போராட்டக் கமிட்டி இதற்கு முன்னும் பல தடவை போராடி வந்துள்ளது.

போராட்டத்தில் இறுதிக்கட்டமாக இம்மாதம் 22-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை உண்ணுவிரத போராட்டமும், 27-ம் தேதியிலிருந்து 30-ம் தேதி வரை மறியல் போராட்டமும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து 3-ம் தேதி வரை முழு அடைப்புப்போராட்டமும் இவர்களால் நடாத்தப்படும்.

இறுதிப் போராட்ட காலங்களில் தெலிங்கானா போராட்ட வீரர்கள் அரசாங்க அலுவலகங்களுக்குள் சென்று அலுவல்கள் நடைபெருமல் தடுப்பார்கள்.

இத்தகவல்களை போராட்டக்கமிட்டி தலைவர் சென்னு ரெட்டி அறிக்கையொன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

### கல்வியதிகாரியாக நியமனம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியருள் ஒருவரான திரு. பி. சச்சிதானந்தம் மன்னார்ப் பகுதிக் கல்வியதிகாரியாக நியமிக்கப் பட்டுள்ளார். விஞ்ஞானப் பட்டதாரியும் டிப்ளோமா பட்டம் பெற்றவருமான திரு. சச்சிதானந்தம், வடபகுதி விஞ்ஞான ஆசிரியர் சங்கப் பிரதம உறுப்பினருள் ஒருவரென்ற முறையில் நீரியல் உயிரியல் ஆராய்ச்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு உழைத்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

### அல்லைப்பிட்டிக்கு

இன்று

### ஆனைக்கோட்டையில் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

தேசிய விளையாட்டுக்குழுவினரின் ஆனைக்கோட்டை பொலிஸ் பகுதி புது வருடக் கொண்டாட்டமும் விளையாட்டுப்போட்டியும், இன்று ஆனைக்கோட்டைப் பொலிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளன. திரு. எம். வைரமுத்து பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

காலையில் ஆனைக்கோட்டை 20 மைல் சைக்கிள் ஓட்டப்

## இருதய வடிவமுள்ள கடிதங்கள்

பிராங்பர்ட், ஏப்ரல். 15

இந்த ஆண்டு இங்கு நடைபெற்ற சர்வதேச கோடைகால கண்காட்சிக்கு 3

## ''விவசாயிகளையும் தொழிலாளரையும் இந்நாடு நினைவுகூரும்''

பிரதமரின் புதுவருடச்செய்தி

கொழும்பு, புதன்

விவசாயிகளும், தொழி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

டக் கமிட்டி இதற்கு முன்னும் பல தடவை போராடி வந்துள்ளது.

போராட்டத்தில் இறுதிக் கட்டமாக இம்மாதம் 22-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை உண்ணாவிரத

சென்று அலுவல்கள் நடைபெறுமல் தடுப்பார்கள்.

இத்தகவல்களை போராட்டக்கமிட்டி தலைவர் சென்னு ரெட்டி அறிக்கையொன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

முறையில் நீரியல் உயிரியல் ஆராய்ச்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு உழைத்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளன. திரு. எம். வைரமுத்து பிரதம விருந்தினராக கலந்து கொள்ளார்.

காலையில் ஆண்களுக்கான 20 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும், 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் நடைபெறும். ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் வைத்து ஆரம்பமாகும் சைக்கிளோட்டம் சண்டிலிப்பாய், சங்கானை, மூளாய், பொன்னாலை, வட்டுக்கோட்டை, அராலி ரோட் வழியாக கல்லுண்டாய், ஒட்டுமடச்சந்தி, காங்கேசன் துறை வீதி வழியாக மீண்டும் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையம் வந்தடையும். பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்கும் மரதன் ஓட்டம் நவாலி அரசடிச்சந்தி, சோமசுந்தரம் வீதி, ஏழுமுற்றி, மானிப்பாய் வழியாக மீண்டும் பொலிஸ் நிலையத்தை வந்தடையும்.

பிற்பகல் சிறுவர் ஓட்டப் போட்டியும் மற்றும் நானுவித போட்டிகளும் நடைபெறவுள்ளன. போட்டிகளில் வெற்றிபெறும் வீரர்களுக்குக் திருமதி வைரமுத்து பரிசில்கள் வழங்குவார். ஜூலியார் எஸ். மகேசன் தேசியக் கொடியை ஏற்றி வைப்பார்.

# தேர்தல் கூட்டங்களில் குழப்பம் செய்தால் சிறை

## இந்திய அரசுக்கு யோசனை

புதுடில்லி, ஏப். 15

'தேர்தல் கூட்டங்களில் குழப்பம் செய்பவர்கள் மீண்டும் அவர்கள் அப்படிப்பட்ட குழப்பத்தைசெய்ய எண்ணுதபடிக்கு கடுமையான தண்டனைவிதிக்கப்படவேண்டும். தேர்தல் கூட்டங்களில் குழப்பம் விளைவிப்பது தண்டனைக்குரிய குற்றமாக்கப்படவேண்டும்.

தேர்தல் கூட்டங்களில் ஏற்படுகின்ற குழப்பத்தை பொலிசாரால் கூட கட்டுப்படுத்த முடியாத நிலையேற்பட்டுவருகிறது.

இந்திய தலைமை தேர்தல் அதிகாரி சென்வர்மா, மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறுர்.

தேர்தல் கூட்டங்களில் குழப்பம் விளைவிப்பவர்களுக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்படவேண்டும். தேர்தல் காலங்களில் மிரட்டுவது, நிர்ப்பந்தம் செய்வது போன்ற செயல்களையும் குற்றமாக கருதவேண்டும் எனவும் அவர் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மன்னுர் குடியில் இந்திரா காங்கிரஸ் மாநாடு

## நாளை ஆரம்பம்

சென்னை, ஏப். 15

ஆளும் காங்கிரஸ் கட்சியின் (இந்திரா காங்கிரஸ்) தமிழ்நாடு காங்கிரஸின் மகாநாடு மன்னுர் குடியில் இம்மாதம் 18ம் 19ம் திகதிகளில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆ. வி. சாமிநாதன் தலைமையில் நடைபெறும்.

இம்மகாநாட்டில் அகில இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சித்தலைவர் ஜெகஜீவன் ராம் பிரதமர் இந்திரா காந்தி ஆந்திர முதல் மந்திரி பிரம்மானந்த ரெட்டி, சி, சுப்பிரமணியம் பக்தவச்சலம் ஆகியோர் கலந்து கொள்ளுகின்றுர்கள்.

மகாநாட்டிற்கான இறுதி ஒழுங்குகள் வெகுதுரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இம் மகாநாட்டில் 5000 பிரதிநிதிகளும், 2 லட்சம் பார்வையாளர்களும், கலந்துகொள்வார்கள்என எதிர்பார்க்கப்படுகின்றது.

பத்திரிகையாளர் மகாநாட்டில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆர். வி. சாமிநாதன் மகாநாட்டின் நிகழ்ச்சி நிரல் முக்கியமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் தீர்மானங்கள் பற்றிய விபரங்களை வெளியிட்டார்.

மகாநாடு ஆரம்பமாவதற்கு முன் 17ம் திகதி காலை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் காரியக்கமிட்டிக் கூட்டம் நடைபெறும். அன்று மாலை பிரதேச காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற இருக்கின்றது.

மகாநாட்டில் நிறைவேற்றப்படும்தீர்மானங்கள்பற்றி பரிசிலனை செய்துமுடிவு இக் கூட்டத்தில் எடுக்கப்படும்.

இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் பம்பாய் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீவிர சோஷலிஸதிட்டத்திற்கு அனுசரணையாகவே அமையும். சோஷலிஸ லட்சியத்தை அடைய நிறைவேற்றப்படும் தீர்மானங்களை எந்தவரிசையில் அமுல் நடத்தப்படவேண்டும் என்பது இம்மகாநாட்டில் முக்கிய கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

■ ஏழை மக்களுக்கும் சிறு வியாபாரிகளுக்கும் உதவ தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் எத்தகைய வழிமுறைகளை க்கையாள வேண்டும்.

■ வேலையற்றுவாடும் பட்டதாரிகளுக்கு 'விமோசனப் பாதையைப் பற்றி ஆராய்தல்.

■ அண்டை மாநில மாவட்டத்துடன் உள்ள பிரச்னைகள்.

ஆகியவை மகாநாட்டில் தீர்மானம் எடுக்கும்போது முக்கிய இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# அல்லைப்பிட்டிக்கு பஸ்சேவை

மண்டைதீவு புதன்

அண்மையில் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள புதிய பஸ்களில் ஒன்றை அல்லைப்பிட்டிக்கு சேவைசெய்ய விடுவதற்கு இ. போ. ச. நடவடிக்கை எடுத்துள்ளது. இதுவரைகாலமும் அல்லைப்பிட்டிக்கு பஸ்சேவையில்லாமல் இருந்தது: பிரயாணிகள் ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் வீதியில் இருந்து அல்லைப்பிட்டிக்கு 2 மைல் தூரம் நடந்து செல்லவேண்டிய நிலையில் இருந்தனர். அல்லைப்பிட்டிக் கிராமத்தின் மாணவர்களதும், மக்களினதும் பிரயாணவசதியை முன்னிட்டு இப் புதிய சேவை நடைபெறவுள்ளது.

# கூடிய சம்பளம் பெறுகின்றனர்

விஸ்வமடு, புதன்

விஸ்வமடு விவசாயப் படைவீரர்கள் தற்போது அதிக சம்பளம் பெறுவதில் அக்கறைகாட்டி வருகின்றனர். விவசாயப்படையின் இந்த ஆண்டு புதிய சம்பள விகிதத்தின்படி கூடுதலாக வேலைசெய்யும் ஒவ்வொரு வீரருக்கும் தலா 1 ரூபா 25 சதவீதம் வழங்க விவசாயப்படை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இந்த ஒழுங்கின்படி இம்மாதத்தில் திரு, கே. குலவீரசிங்கம் தலைமையில் இயங்கும் விவசாயப்படை வீரர் கோஷ்டியில் உள்ள கந்தையா என்ற வீரரும் திரு. கே. என், இராசையா தலைமையில் இயங்கும் விவசாயப்படை வீரர் கோஷ்டியில் சுந்தரலிங்கம் என்ற வீரரும் ஆளுக்கு 68 ரூபா கூடுதலாக அவர்களின் மாதச் சம்பளத்திலும் பார்க்க பெற்றுக்கொண்டனர். தற்போது ஒவ்வொரு விவசாயப்படை வீரரும் தனது கடினஉழைப்பினுல் மாதமொன்றிற்கு 168 ரூபா சம்பளம் பெறுகிருர்கள்.

# பெண்ணைக் காணவில்லை

புத்தூர், புதன்

ஆவரங்காலைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரைக் காணவில்லையென அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் 'புகார்செய்யப்பட்டுள்ளது. காணுமற்போன பெண் ஐந்து வருடங்களுக்கு முன் விவாகமாகிக் கணவனுடன் வாழ்ந்துவந்ததாகவும், நித்திரைக்குப்போன மனைவி இரவில் காணுமற் போனதானவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயலிலுள்ள வாலிபர் ஒருவரும் தலைமறைவாகியிருப்பதாக நம்பப்படுவதாகவும், அவர் மீது தாம் சந்தேகிப்பதாகவும் காணுமற்போன பெண்ணின் கணவன் தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

# திருவிழா

சுழிபுரம், வியாழன்

மூளாய் சித்தி விநாயகர் கோவில் 6-ம்திருவிழா இன்று விமரிசையாக நடைபெறவுள்ளது. இரவு விசேஷ மேளக்கச்சேரியும் சிவ. வை. நித்தியானந்தசர்மா 'பட்டினத்தடிகள்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவர்.

# இருதய வடிவமுள்ள கடிதங்கள்

பிராங்பர்ட், ஏப்ரல். 15

இந்த ஆண்டு இங்கு நடைபெற்ற சர்வதேச கோடைகால கண்காட்சிக்கு [illegible]3 பார்வையாளர்கள் வந்திருந்தனர். உலக நாடுகளில் 43 நாடுகள் இதில் கலந்து கொண்டன. வீட்டை அலங்கரிக்கும் பொருள்கள் பீங்கான் பாத்திரங்கள், கண்ணுடிப் பொருள்கள், காகிதப் பொருள்கள், உடைகள், அணிகள் பரிசுப்பெருள்கள் சங்கீதக் கருவிகள், அழகு சாதனப்பொருட்கள் இவை எல்லாம் இக் கண்காட்சியில் இடம் பெற்றன.

மிகவும் விலை அதிகமுள்ள சில பொருள்களும் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. காதலர்கள் இனி இருதயத்துடன் இருதயம் இணைந்து பேசலாம். காதல் கடிதங்கள் எழுதுவதற்கென்றே இருதய வடிவமுள்ள கடிதங்கள் தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. யுவர்களும் யுவதிகளும் இவைகளை விரும்பி வாங்கினர். உல்லாசமாகநடக்கும்போது கைக்கு அலங்காரமாக இருக்க ஒரு வாக்கிங் ஸ்டிக் பாரிஸில் டிஷைன் செய்யப்பட்டு காட்சியில் வைக்கப்பட்டிருந்தது.

பெண்மணிகளுக்கான அழகிய கைப்பைகள், ஆரஞ்சு வர்ணக்குடைகள் இவைகளும் மற்றும் சங்கீதக் கருவிகள் பலவும் இடம் பெற்றிருந்தன. பிரான்ஸில் தயாரான வெள்ளி புல்லாங்குழல்கள் குழந்தைகளுக்கு பியானே கற்றுத்தருவதற்கான பாடப்புத்தகம் இவைகளும் இடம் பெற்றிருந்தன.

மண்ணுக்கினிய முறையில் உடைதரித்த யுவதிகள் அங்கங்கே உள்ள பொருள்களுக்கு விளக்கம் தந்ததுடன் அல்லாமல் மொழி தெரியாமல் தவித்த பல அயல் நாட்டினருக்கும் அவர்கள் மொழியிலேயே பேசி உதவி செய்தனர்.

"தமிழரசுக்கட்சி

# மலை நாட்டுத்தமிழர் நலனுக்கு போராடும் ஒரே இயக்கம்"

## — வி. என். நவரத்தினம்

கோப்பாய். புதன்

'தமிழரசுக்கட்சி மலைநாட்டுத் தமிழ் மக்களின் நலனுக்குப் போராடும் ஓர் இயக்கம். இலங்கையிலே வசிக்கின்ற நாடற்ற மக்கள் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் செய்யப்பட்ட ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தத்தை நாங்கள் நிபந்தனைகளுடனேயே ஏற்றுக் கொண்டோம். மலையகத் தமிழருக்கு எங்கள் கட்சி அநீதி விளைவிக்கவுமில்லை; அவர்களைப் புறக்கணிக்கவுமில்லை. மற்றக் கட்சியினர் கூறுவது போல நாம் யூ என் பியில் ஒட்டிக் கொண்டிருக்கவும் விரும்பியதில்லை. கடந்த 65-ம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசாங்கம் அமைக்க எமது உதவியை நாடினர். அப்பொழுது நாம் நிபந்தனைகளுடனேயே அவர்களுக்கு ஆதரவு நல்கினேம்.'

இவ்வாறு நீர்வேலியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் சாவகச்சேரி முன்னுள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வ ந நவரத்தினம் கூறினுர்.

திரு நவரத்தினம் மேலும் பேசியதாவது; ஸ்ரீ மா — சாஸ்திரி ஒப்பந்தத்தை நாம் எமது விருப்பத்துடன் மாத்திரம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுகுறித்து மலையக மக்களின் தலைவர்களுடனும் ஸ்தாபனங்களுடனும் கருத்தரங்குகள் நடாத்தி அவர்களும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலேயே ஒப்பந்தத்தைத் தமிழரசுக்கட்சி ஆதரித்தது. எமது திருத்தங்கள் ஏற்கப்பட்டு யு என் பி அரசாங்கமும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தாலேயே அவர்களை ஆதரித்தோம்.'

அடுத்து கிளிநொச்சி வேட்பாளர் திரு எம் ஆலாலசுந்தரம் பேசுகையில், தமிழரசுக்கட்சி அரசாங்கத்தில் சேர்ந்தது குறித்து மாற்றுக் கட்சியினர் தூற்றிவருகிருர்கள் என்றும் அதே நேரத்தில் தமிழ் மக்களைக் குறித்துச் சிந்தியாது சுயநலமே குறிக்கோளாக வைத்து மந்திரிப் பதவிக்காக யூ என் பியுடன் தமிழரசு சேரவில்லையென்றும் மக்கள் நலன் கருதி ஒப்பந்தத்துடனேயே தமிழரசுக்கட்சி அரசாங்கத்தில் சேர்ந்தது என்பதை மக்கள் நன்கு உணர வேண்டும் என்றும் சொன்னுர்'

செனட்டர் திரு எஸ் நடராசா, திரு எம் கே அந்தனிசில் உட்படப் பலர் பேசினர்.

# "விவசாயிகளையும் தொழிலாளரையும் இந்நாடு நினைவுகூரும்"

## பிரதமரின் புதுவருடச்செய்தி

கொழும்பு, புதன்

கடந்த ஐந்து வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார அபாயத்திலிருந்து காப்பாற்றிய விவசாய, தொழிலாள மக்களுக்கு இந்நாடு என்றும் நன்று செலுத்துமென, புதுவருடத்தை ஒட்டி பிரதமர் சேனநாயக்கா விடுத்த செய்தியில் குறிப்பிட்டார்

அவர் மகியங்கனையிலிருந்து விடுத்த செய்தியில் மேலும் கூறுவதாவது:-

விவசாயிகளும், தொழிலாளிகளும், நாட்டுக்குச் செய்த சேவையை இந்நாட்டிலுள்ளவர்கள் என்றும் நினைவு கூருவர். நாட்டில் இன்று சுபீட்சத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. இச் சுபீட்சத்திற்குக் காரணம் மக்களிடையே ஏற்பட்ட ஐக்கியமேயாகும். நாட்டின் பொருளாதாரத்தை வலிமைப்படுத்த மேலும் ஐக்கியத்துடன் நாம் இருந்து செயல்படவேண்டும்.

# "கட்டடத்திற்கு அத்திபாரம் அமைப்பது போன்றது

யாழ்ப்பாணம் வியாழன்

"ஒரு சமுதாயத்தின்வளர்ச்சிக்கு பால்ய வயதினரை நல் வழிக்கு இட்டுச்செல்வது ஒரு கட்டடத்துக்கு அத்திபாரம் அமைப்பது போன்றது" என்று டாக்டர் என். ரி. சம்பந்தன், காரைநகரில் வாரிவளவு நல்லியக்கச் சபையினுல் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

இளைப்பாறிய காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு ஆ. தியாகராசா பேசுகையில் வாரிவளவு நல்லியக்கச் சபையின் குறிக்கோள் இளம் சமூகத்தை நல்வழிப் படுத்தும் என நம்பிக்கை தெரிவித்தார்.

சபைத்தலைவர் திரு, சி க. கணேசன் தலைமையில் விழா நடைபெற்றது. நல்லியக்க சபை இக்கிராமத்திலுள்ள பாலர்க்குப் பாடசாலை ஒன்றை. ஆரம்பிக்கப்போவதாகவும் அதக்குக் கிராமங்களை ஒத்துழைக்கும் வண்ணம் கேட்டுக்கொண்டார். சிறுபிள்ளைகளுக்கு விளையாட்டுப் பூங்கா ஒன்று அமைக்கச் சபை திட்டமிட்டுள்ளதாகவும்வாசிகசாலை ஒன்றை உடனடியாக ஆரம்பித்து நடாத்துமென்றும் அவர் சொன்னுர்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் பேசுகையில், காரைநகரில் சென்ற ஐம்பது ஆண்டுகளாக கல்வி வளர்ந்த வரலாற்றை எடுத்துச் சொன்னுர்.

வேம்படி மகளிர் உயர்தரக்கல்லூரி அதிபர் செல்வி மா. தம்பையா பேசுகையில், பெண்கள் சமத்துவமாக வாழும் நிலைவந்துவிட்டது என்றுர்.

திரு. மு. திருநீலகண்டசிவம் பேசுகையில் வாரிவளவு இளைஞருடைய முன்னேற்றம்பற்றியும் அவர்கள் அகில இலங்கையில் பரந்து பெருமை தரும் தொழில் மற்றும்உத்தியோகம்செய்து வருவதாகச் சொன்னுர்.

இன்னும் பலரும் பேசினுர்கள்.

# ஜெமினிகணேசன் வெளிநாடுவிஜயம்

சென்னை, ஏப்ரல் 15

சினிமா நடிகர் ஜெமினி கணேசன் அடுத்த மாதம் வெளிநாடு செல்ல இருக்கின்ருர். அடுத்த் மாதம் மேற்கு ஜெர்மனியில் நடைபெறவிருக்கும் உலக சினிமாபட விழாவில் கலந்துகொள்ளவே அவர் செல்லுகின்ருர்.

இவ்விழாவில் கலந்து கொண்ட பின் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஒரு மாத காலம்வரை சுற்றுப்பிரயாணம் செய்ய ஜெமினி கணேசன் திட்டமிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அறிய முடிந்ததை அறிவது; அறியமுடியாததை அமைதியாய்ப் போற்றி வணங்குவது - இவைதான் அறிவுபடைத்த மனிதனுக்கு மிக உன்னத இன்பம் அளிப்பவை. — கபே.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் சித்திரை மாதம் 3-ந் திகதி (16-4-70)

## சித்த வைத்தியம்

இலங்கை ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியில் சித்த வைத்தியம் படிக்கும் மாணவர்கள் சமஸ்கிருதம் படிக்கவேண்டுமென வற்புறுத்தப்படுகிறதாகவும் இதற்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததும் இப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் பொருட்டு ஆயுள்வேத ஆணையாளர் ஒரு கமிஷனை நியமித்தார். அந்தக் கமிஷனும் சித்தவைத்தியத்துக்கு சமஸ்கிருதம் அவசியமென சிபார்சுசெய்திருக்கிறதாம்.

சித்தவைத்தியம் சித்தர்களால் உருவாக்கப்பட்டது. சித்தவைத்திய முறைகளை விளக்கும் வாகடங்கள் தமிழ்மொழியிலேயே எழுதப்பட்டவை. பழைய சுவடிகள் ஏட்டுப்பிரதிகள் யாவும் தமிழ்மொழியில்தானிருக்கின்றன. ஆயுள்வேத வைத்தியமுறைகள் சமஸ்கிருதத்திலிருக்கின்றன. ஆயுள்வேதத்துக்கு சமஸ்கிருதம் தேவையென்றால் அதை ஒப்புக்கொள்ளலாம். யூனானி வைத்தியம் படிக்க உருது வேண்டுமென்றால் அதிலும் நியாயமுண்டு. சித்த வைத்தியம் படிப்பதற்கு சமஸ்கிருதம் தேவையென்பதன் அர்த்தம் என்ன?

இலங்கை ஆயுள்வேத வைத்தியக்கல்லூரியில் ஆயுள்வேதம் ஒரு பிரிவாகவும் சித்தவைத்தியம் ஒரு பிரிவாகவும் யூனானி வைத்தியம் மற்றொரு பிரிவாகவும் இயங்கிவருகின்றன. சித்த வைத்தியத்துக்கு சமஸ்கிருதம் தேவையென்று வற்புறுத்தப்படுவது நீண்டகாலத் திட்டத்தை மனதில் கொண்டு செய்யப்படும் ஒரு சதி நடவடிக்கையென தமிழ் மாணவர்கள் அஞ்சுகின்றனர் அவர்களது அச்சகத்தில் நியாயமில்லையென்று சொல்லமுடியாது ஆயுள்வேதத்துக்கு சமஸ்கிருதம் அவசியம். இங்கு சித்தவைத்தியம் கற்பவர்கள் பெரும்பாலும் தமிழர்தான். சித்த வைத்தியம் படிப்பதற்கு சமஸ்கிருதம் அவசியம் என்ற நிலையேற்பட்டால் தமிழ்மூலம் சித்த வைத்தியம் படிப்பிக்க வேண்டிய அவசியமிராது; ஆயுள்வேதக் கல்லூரியில் தமிழ்ப் பிரிவையே மூடிவிடலாம் என்பதுதான் அந்தரங்கத்திட்டம் என்று தமிழ் மாணவர்கள் கருதுகின்றனர். ஆயுள்வேத வைத்தியப் பிரிவிலேயே சித்த வைத்தியத்தையும் சேர்த்துக்கொள்ளலாமென்றும் பின்னர் சிங்களமொழி மூலமே சித்தவைத்தியத்தையும் போதிக்கலாமென்றும் ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி நிர்வாகம் கருதக்கூடும்.

சித்தவைத்தியம் படிக்க சமஸ்கிருதம் அவசியம்தானா என்பதுபற்றி ஆராய்ந்து சிபார்சுசெய்ய ஆயுள்வேத வைத்தியக்கல்லூரி கமிஷனர் நியமித்த கமிஷன் நடத்திய விசாரணையிலும் தமிழ்மாணவர்களுக்குத் திருப்தியில்லை. சமஸ்கிருதம் படிப்பதால் யாருக்கும் கெடுதியில்லை. எத்தனை மொழிகளை ஒருவர் கற்கிருரோ அவ்வளவுக்கு அவரது அறிவுவிருத்தியடையுமென்பதில் ஐயமில்லை. ஆனால் தமிழ் மொழியில் உள்ள சித்தவைத்தியமுறைகளை சமஸ்கிருதம் படித்து அந்த மொழி மூலம் கற்க வேண்டுமென்பதன் அர்த்தம் என்ன?

இது சித்தவைத்தியம் படிக்கும் மாணவர்களின் பிரச்னையோ, ஆயுள்வேதக் கல்லூரியின் பிரச்னையோ அல்ல, சித்தவைத்தியத்துக்கே ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பெரும் பிரச்னை. தமிழ்மக்கள் அசமந்தமாக இருக்கக்கூடாது.

# சிறிலங்கா-யு.என்.பி. கட்சிகளின் தேர்தல் உறுதிமொழிகள்

கோட்டை, புதன் நாட்டின் இருபெரும் அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கியமாகப் பொருளாதாரப் பிரச்னையையே வலியுறுத்தவிருக்கின்றன. இருகட்சியினரும் தேர்தல் மேடைகளில் தாங்கள் பொருளாதாரத் துறையில் செய்யப்போகும் சீர்திருத்தங்களைப் பற்றிப் பொதுமக்களுக்குக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

அரசாங்க, தனியார் துறையினர் இருவருக்கும் சம்பள உயர்வளிப்பது என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. இதே நேரத்தில் கூட்டணியினர் தாங்கள் பதவிக்கு வந்ததும் இரண்டுபடி அரிசியை மக்களுக்குத் திரும்பவும் வழங்கப் போவதாக உறுதியளிக்கின்றனர்.

கைத்தொழில் வர்த்தகம் ஆகியனவற்றில் இரண்டு கட்சிகளினது கொள்கைக்கு மிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. கலப்பானதொரு பொருளாதாரத்தை இரு கட்சிகளும் விரும்பியபொழுதும் ஐக்கிய தேசியக்கட்சி தனியார் துறையினர் தொழில்களை விஸ்தரிப்பதில் ஆர்வம்காட்டுகிறது கூட்டணிககட்சிகள் அரசாங்கமே இத்துறையில் பெரும் ஈடுபாடுடையதாகவிருக்கவேண்டுமென விரும்புகிறது

ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்து உணவுற்பத்தியைப் பெருக்கி உடையிலும் உணவிலும் நாட்டைத் தன்னிறைவுபெறச் செய்ய நோக்கம் கொண்டுள்ளதோடு கைத்தொழில் விவசாயத்துறைகளில் தனியார், அரசாங்கத்துறையினரை ஊக்குவிக்கவுள்ளது. அத்துடன் உள்நாட்டு மூலப்பொருள்களைக் கொண்டு கைத்தொழில்களை வளர்க்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது. ஆனால் கூட்டணி இக்கொள்கையை விரும்பவில்லை. பிரதான கைத்தொழில்களையும் நாட்டுக்கு வருவாய் தரும் பொருள்களையும் அரசாங்கமே பொறுப்பேற்று நடத்துவதையே கூட்டணி விரும்புகிறது. தனியார் துறையினருக்கு இத்தொழிற்துறைகளில் முக்கியத்துவம் கொடுக்க அதுவிரும்பவில்லை. வர்த்தக வங்கிகள் யாவற்றையும் தனியார் துறையினரிடம் இது விடப்படமாட்டாது எனவும் இக்கூட்டணியினர் கூறுகின்றனர். ஆனால் தற்போது வர்த்தக-வியாபார இறக்குமதி விடயத்தில் கூட்டணியினர் கூறும் நிலைமையேயுள்ளது

மகாவலித் திருப்புத்திட்டத்தினால் நாட்டின் வேலையில்லாப் பிரச்னையைப்போக்கிவிடலாம். இத்திட்டத்தின் மின்சார உற்பத்தியின் மூலம் பல்வேறு கைத்தொழில்களை கிராமம்புறங்களில் நிறுவலாம். அதே நேரத்தில் இந்த மகாவலி நீரைக் கொண்டு வரண்டபிரதேசம் முழுவதும் நெற்செய்கையை விருத்திசெய்யலாம் என ஐ. தே. கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடுகிறது. ஆனால் கூட்டணியினர் இத்திட்டத்தை எதிர்க்கவில்லையெனினும் உலக வங்கியின் கடனால் நாட்டிற்குப் பேராபத்து வந்துள்ளது எனக் கூறுகின்றனர்.

பொருளாதாரப் பிரச்னையைப் போன்றே நாட்டின் அரசியலமைப்பைப் பொறுத்தளவிலும் இருபெரும்கட்சிகளிடையேயும் அதிக வேறுபாடில்லையென்றே கூறலாம். அரசியலமைப்பில் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து இலங்கையில் குடியரசு நிறுவப்படவேண்டுமென ஐ. தே. கட்சி கூறுகிறது. இலங்கையில் குடியரசையே விரும்பும்கூட்டணியும் இக்குடியரசை அமைக்கும் விதத்திலேயே வேறுபடுகிறது. அரசியலமைப்புச் சபையை நிறுவி அதன் மூலம் புதிய அரசியல் திடடத்தை உருவாக்கி குடியரசை நிறுவவேண்டுமெனக கூடடணி விரும்புகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி பிறநாட்டுத் தொடர்பில் நடுநிலைமையையே கைக்கொள்வதோடு ஐக்கிய நாடுகள் மூலமே உலக நாடுகளிடையே அமைதிக்கு வழிகோலும்

கூட்டணி வல்லரசுநாடுகளோடு கூட்டுச்சேராக் கொள்கையையே அனுஷ்டிக்கும் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பொறுத்தளவில் இரு கடசிகளும் பத்திரிகைச் சுதந்திரத்தை வலியுறுத்தியுள்ளன, கூடடணி தற்போதுள்ள முதலாளித்துவ தினசரிகளின் அந்தஸ்திற்கு மற்றைய பத்திரிகைகளும் உயர உதவுவதெனத் தீர்மானித்துள்ளது

## 'எந்தக்கட்சி ஆண்டாலும் சிங்களவர் பாதுகாக்கப்படுவர் ஆனால் தமிழர் நிலை . . .”

— எஸ். ஜே. வி.

மாவிட்டபுரம், புதன் ''சிங்களக் கட்சிகளான யு.என்.பியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஆட்சியைக் கைப்பற்ற போட்டி போடுகின்றன. எந்தஅரசுவந்தாலும் சிங்கள மக்கள் பாதுகாக்கப்படுவார்கள். இலங்கை அரசியல் திட்டப்படி சிங்களவர் நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டுள்ளனர். ஆனால் அபாயகரமான நிலையில் இன்று வாழ்கிறோம்.''

இவ்வாறு தெல்லிப்பழை தமிழரசுக் கிளையின் 6வது ஆண்டு விழாவும் பொதுக் கூட்டமும் சந்தை மைதானத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துரையாற்றிய திரு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கூறினார்.

[illegible] மன் ஆலயத்திலிருந்து [illegible] ர[illegible] கூலவர்கள் கொண்ட[illegible]கம் தொடர்ந்துபேசுகையில் சிங்களக்குடியேற்றம், போதனாமொழி ஆகியவற்றால் தமிழ் இனம் அழியக்கூடிய நிலையை நீக்க வேண்டுமானால் தமிழரசு சார்பில் போட்டியிடும் 19 பேரும் ஆட்சிமன்றம் செல்ல வேண்டும் என்றார்.

செனட்டர் சு. நடராசா, திருவாளர்கள்: அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம் ஜனப் முத்துராஜா, மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் எம். ஆலாலசுந்தரம் ஆகியோரும்உரையாற்றினார்கள்

---

கோட்டை, [illegible]ன்

தெங்கு கூட்டு ஸ்தா[illegible]ம் இரண்டு கோடி 50 லட்சம் ரூபா செலவில் தொழிற்திட்டம் ஒன்றையாரம்பித்துள்ளது. இத்திட்டங்கள் பூர்த்தியாக 3 வருடகாலம் எடுக்குமாம் [illegible] இத்தொழில் [illegible]

## ஜெயராஜ் எழுதுவது

நீர்கொழும்பிலிருந்து ஒரு சிங்கள கத்தோலிக்க குடும்பத்தார் மதுரை மீனாட்சி கோயிலுக்குச் சென்று அதன் கலை அழகையும் பெரிய அமைப்பையும் கண்டனர். 'இக்கோயிலைக் கட்வுளேதான் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்' என்று தன் இளம் மனைவி கூறியதாக கொழும்பில் வேலை பார்க்கும் அச்சிங்களவர் என்னிடம் கூறினார். தமிழ் நாட்டிலுள்ள மற்ற பெரிய கோயில்களையும் தாங்கள் அடுத்தமுறை பார்க்கவிரும்புவதாகத் தெரிவித்தார். அச்சிங்களக் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்களும் மதுரையிலே புதிய 'அகோபா' பட்டுப் புடவைகளை வாங்கிப் பெருமையுடன் உடுத்திக் கொண்டு வந்தனர். நல்ல வேலையாக கட்டிவந்த புடவைகளுக்கு தலைமன்னர் கஸ்டம்ஸில் தீர்வை விதிக்கவில்லை.

வடஅயர்லாந்தைச் சேர்ந்த ஒரு வெள்ளைக்கார இளம் தம்பதிகளும் மதுரை மீனாட்சி கோயிலுக்குள் சென்றிருந்தனராம். புருஷன் கத்தோலிக்கர், மனைவி புரட்டஸ்டென்ட் கிறிஸ்தவர். இருவரும் பள்ளிக்கூட ஆசிரியர்கள். மதுரை கோவில் கோபுரங்களும் சித்திரங்களும் தம் மனதைப் பெரிதும் கவர்ந்ததாகவும் தமிழரின் இந்து மக்களின் பெருமையை இக்கோயில் உலகுக்குக் காட்டுவதாகவும் கப்பலில் இலங்கைக்கு வந்த அந்த வெள்ளைக் காரப் பெண் கூறினார். முன்தினம் மதுரைக் கோயிலிலே ஒரு கூட்டம் நடந்ததாயும், பல்லாயிரக்கணக்கானவர்கள் கூடி அமைதியாக ஒரு பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்ததாயும் கோவிலில் இவ்வித சமூகசேவைகள் நடப்பது போற்றத்தக்கதென்றும் அவர் தெரிவித்தார்.

அன்று மதுரை மீனாட்சி கோயிலில் நடந்த கூட்டம் என்ன தெரியுமா? நமது ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் ஒருமாத காலமாக ஸ்ரீ கம்பராமாயண இன்னிசைக் கதாகாலட்சேபம் செய்து, முடிவாக 'பட்டாபிஷேகம்' செய்தார். மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தலைமைவகித்துப் பேசுகையில், காலஞ்சென்ற அண்ணாதுரை அவர்கள் தமது முதல் ஆண்டு ஞாபகதினத்தன்று மீரிகமையில் ஆவி உலகத்திலிருந்து அனுப்பியிருந்த விசேஷ செய்தியொன்றை படித்தார். அச்செய்தியில் அவர் மக்களிடையேதெய்வ நம்பிக்கையை வளர்க்க வேண்டியதையும் அதன் [illegible]

யம். கோவில்களில் இந்துக்களல்லாதாரை அனுமதிப்பதைப்பற்றித்தான் இந்துக்கள் யார், மற்றவர்கள் யார் என்பதைக் கண்டு பிடிப்பது இக்காலத்தில் சுலபமல்ல. எல்லாரும் ஒரே மாதிரி உடுத்துகின்றார்கள். இந்துக்களல்லாதார் பலர் ஏற்கனவே மதுரை, ஸ்ரீரங்கம், மலைக்கோட்டை, சிதம்பரம் முதலிய கோயில்களுக்குச் செல்லுவது பகிரங்க ரகசியம். என்ன மதம்? என்ன சாதி? என்று கோவில்களில் யாரும் கேட்பதில்லை. மதுரை கோயிலில் உள்பிரகாரத்தில் நுழையும் வாசலுக்கு முன் 'இதற்கு மேல் இந்துக்களல்லாதார் செல்லக்கூடாது' என்று ஒரு போர்டு இருந்தது. அதை இப்போது காணவில்லை. கோவிலுக்குள் யார் சென்றாலும் அதைப்பற்றி யாரும் தடுப்பதாகக் காணோம். பெரிய நகரங்களிலுள்ள கோவில்களைப்பற்றித் தான் கூறுகின்றேன்.

இவ்விஷயமாக தமிழக முதலமைச்சர் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மற்றச் சமயத்தவர்கள் இந்துக் கோவில்களில் பிரவேசிப்பதற்கான சில நிபந்தனைகளை வெளியிட்டிருக்கின்றார், பூசா காலங்களைத் தவிரமற்றசமயங்களிலேயே அவர்கள் செல்லலாமென்றும், ஆலய நிபந்தனைகளின் படி சுத்தமாகச் செல்ல வேண்டுமென்றும் கூறுகின்றார். பொதுமக்களின் மனம் புண்படாத முறையில். இந்த மாறுதலை தமிழக முதல்வர் செய்வாரென்பதற்கான அறிகுறிகளை காணககூடியதாக உள்ளது.

மேலே குறிப்பிட்டது போல், வெளிநாடுகளிலிருந்து பிற சமயத்தவர்கள், மதுரை முதலிய பெரிய கோவில்களைப் பார்த்து, இந்து சமயத்தைப் பற்றியும் கலைகளைக் குறித்தும் பெருமதிப்புக் கொள்ளுவதுடன் தங்கள் நாடுகளிலிருந்து மற்றநண்பர்களையும் அங்கு வந்து பார்க்கும்படி கூறப்போவதாயும், தாங்களே மீண்டும் வரவிரும்புவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மதுரை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமவர்களை இதைப் பற்றிக கேட்டதற்கு, தாம் கொழும்பு ஜிந்துப்பிட்டி என்கிற ஜயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் 20 வருடங்களுக்கு முன் தர்மகர்த்தாவாக இருக்கையில், அக்கோவிலுக்குள் யாரும் எவ்வித சாதி, சமய வேற்றுமையுமின்றி வந்து வழிபடலாமென்று அனுமதித்ததாகவும், ஆகவே தமிழக முதல் அமைச்சரின் அறிக்கையை ஆட்சேபிகக எதுவுமில்லை என்றும் தெரிவித்தார். அவர் ஈழத்துக்கு வந்திருக்கையில், பல ஹரிஜனங்களையும் தொட்டு எவ்வித வேற்றுமையும் பாராட்டாமல் தீட்சை அளித்தது குறிப்பிடத்தக்கது. அவரது மதுரை ஆதீனத்திலே பிற சமயத்தவாகள் இந்து சமயத்துக்கு மாற விரும்பினால் அவ்விதமே சமய தீட்சை அளித்து இந்துப்பெயர் கொடுத்து சேர்த்துக்கொள்ளப்பட்டு வருகிறார்கள்.

ஒருமாதமாக கொடிகாமத்தில்

## திருட்டு சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை

கொடிகாமம், புதன் கொடிகாமப் பகுதியில் கடந்த ஒருமாத காலமாக திருட்டு சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஆயுதப்பொலிஸார், இரவு பகல் காவல் புரிந்து வருகின்றனர்.

கடந்த மாதம், இங்குள்ள அரசினர் பாடசாலை, கந்தசுவாமி கோவில் பலசரக்கு கடைகள் வீடுகள் மற்றும் பல கடைகளில், திருட்டுசம்பவங்கள் நடைபெற்று வந்தன. சாவகச்சேரி பொலிஸ் நிலைய புதிய பொறுப்பதிகாரியாக திரு கே. கதிர்காமநாதன் நியமிக்கப்பட்டபின்னர், இப்பகுதிகளில் திருட்டு சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை.

புதிய இன்ஸ்பெக்டர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் தினமும் இப்பகுதியில் ரோந்துசுற்றி வருகின்றனர்; இதனால் குற்றச் சம்பவங்கள் இப்பகுதிகளில் குறைந்திருக்கிறது. தற்பொழுது இங்கு அமைதி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மாணவர்கள் அஞ்சு
நின்றனர் அவர்களது
அச்சகத்தில் நியாயமில்லை
(யென்று சொல்லமுடியாது
ஆயுள்வேதத்துக்கு சமஸ்

அல்ல, சுதந்திரத்துக்கே ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பெரும் பிரச்னே. தமிழ்மக்கள் அசமந்தமாக இருக்கக்கூடாது.

## ஜூன் 7ல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ம்பில் முக்கிய பேச்சுவார்த்தைகள் குசுகுசு கூட்டங்கள் நடைபெறும், ஆதலால் நான் கலந்து கொள்ள வேண்டியதிருக்கும்' என்ருர் திரு. செல்லப்பா சுந்தரலிங்கம்!

தேர்தல் நடைபெறும் திகதியான மே 27ம் திகதிக்கு முன் ஒருநாளைக் குறிப்பிட்டு மாஜிஸ்திரேட விக்னராஜா (கட்டபோது தேர்தல் முடியும்வரை தனக்குஓய்வில்லை என்றும், தேர்தலில் ஈடுபட்டவர்களுக்குத்தான் அதுபற்றிய சிரமங்கள் எல்லாம் தெரியும் என்றும் சொன்னுர் திரு சி. சுந்தரலிங்கம்.

இதன்பின்னர் ஜூன் 13ம் திகதிக்கு வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார் மாஜிஸ்திரேட

திரு. சி. சுந்தரலிங்கம் தேசிய உடையில் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார். வோட்டு வேட்டைக்குச் சென்றுவிட்டு நேரடியாக நீதிமன்றம் வந்ததாகவும், வழக்குமுடிந்தவுடன் விட்டஇடத்திலிருந்து தொடர்ந்து வோட்டு வேட்டையிலீடுபடச் செல்வதாகவும் திரு சுந்தரலிங்கம் நமது நிருபரிடம்கூறினுர்.

பொதுத் தேர்தல் முடிந்து ஆட்சிமன்றம் முதன் முறையாக ஜூன் 7ந்திகதிதான் கூடும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## அப்பலோ-13...

1-ம் பக்க தொடர்ச்சி)

களைக் காப்பாற்றுவதற்கு உதவி செய்யவேண்டுமென்ற சர்வதேச உடன்படிக்கையொன்றின்படி இந்த நாடுகள் உதவக்குழு வைத்திருக்கின்றன. ஐ. நா. ஆதரவின்கீழ் ஏற்பட்ட இந்த சர்வதேச உடன்படிக்கையின் பிரகாரம் விண்வெளி வீரர்கள் ஆபத்தின் காரணமாக வேபருரு நாட்டில் அல்லது கடலில் இறங்க நேர்ந்தால் சம்பந்தப்பட்ட நாடு அந்த வீரர்களை காப்பாற்றுவதுடன் அவர்களை விண்வெளிக்கு அனுப்பிய நாட்டுக்கு பத்திரமாகத் திருப்பி அனுப்பவேண்டும் என்பது இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம்.

அப்பலோ-13 பிரயாணம் ஆரப்ப முதலே பிரச்னைகளைக் கிளப்பிக்கொண்டு வந்துள்ளது. மார்ச் மாதம் புறப்படவிருந்த இது முதலில் ஒரு மாதம் பின்போடப்பட்டது. இம்மாதம் 12-ந் திகதி அதிகாலையில் புறப்படுவதற்காக இறுதி பரிசோதனை நடத்தப்பட்டபோது எரிபொருள் அழுத்தப்பகுதியில் இடைஞ்சல் ஏற்பட்டு திருத்தப்பட்டது. அதன் பின் வீரர்களில் ஒருவருக்கு அம்மைநோய் ஏற்படக்கூடிய நிலைமை உருவாகி அவருக்குப் பதில் வேறு ஒருவர் பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டார். இப்பொழுது சந்திரனை

## முதலாவது ரஷ்ய-சிங்கள அகராதி

கொழும்பு புதன்

முதலாவது சிங்கள-ரஷ்ய அகராதி மாஸ்கோவில் இவ்வாண்டு வெளியாகவுள்ளது.

ஏ.பெலிகோவிச், வி.வியாலாய்வ் ஆகிய இருவருமே இந்த அகராதியைத் தயாரித்துள்ளனர். நீண்டகாலம் இலங்கையிலிருந்து சிங்கள மொழியைஇவர்களிருவரும் கற்ருர்களென்பது குறிப்பிடத்தக்கது: இந்த சிங்கள—ரஷ்ய அகராதியில் முப்பதினுயிரம் சொற்கள் அடங்கியுள்ளன. (சி பி ஏ)

## தப்பியோடினர்

கண்டி, புதன்

போகம்பரை மறியல்சாலையில் இருந்து 3 மறியல்காரர்கள் மறியல்சாலை சுப்பிரின்டனின் வீட்டுக்குச்செல்லுஞ் சுரங்க வாய்க்கால் வழியாகத் தப்பி ஓடிவிட்டனர்

கருணரத்தின, பியசிறி. ஜோசெப் அப்புஹாமி ஆகிய மூவருமே தப்பியோடிய கைதிகள் இவர்கள் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என மறியல்சாலை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அண்மிய கட்டத்தில் கலத்தில் அதிர்ச்சிக்குரிய கோளாறு ஏற்பட்டு அவர்கள் திரும்பி வரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

துவதையே கூட்டணி விரும்புகிறது. தனியார் துறையினருக்கு இத்தொழிற்துறைகளில் முக்கியத்துவம் கொடுக்கஅதுவிரும்பவில்லை. வர்த்தக வங்கிகள் யாவற்றையும் தேசியமயமாக்குவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். பிரதானபொருளகளை இறக்குமதி செய்வதை அரசாங்கமே கவனிக்கும்.

அதில் கலந்துரையாற்றிய திரு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கூறினுர்.

தெல்லிப்பழைதுர்க்கைஅம்மன் ஆலயத்திலிருந்து தமிழரசு கலைவர்கள் கொண்ட ஊர்வலம் புறப்பட்டு கூட்டமைதானத்தை அடைந்தது.

திரு. வ. சரவணமுத்து தலைமையில் நடந்த இவ் விழாவில் திரு. செல்வநாய

தெங்கு கூட்டு ஸ்தாபனம் இரண்டு கோடி 50 லட்சம் ரூபா செலவில் தொழிற்திட்டம் ஒன்றையாரம்பித்துள்ளது. இத்திட்டங்கள் பூர்த்தியாக 3 வருடகாலம் எடுக்குமாம் இத்தொழில் மூலம்தெங்குப்பொளில் இருந்து பல்வேறுவகைப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

## 23-4-70 வெளிவருகிறது




## இடம்: வீரசிங்கம் மண்டபம்
## யாழ்ப்பாணம்

கமையில் ஆவி உலகத்திலிருந்து அனுப்பியிருந்த விசேஷ செய்தியொன்றை படித்தார். அச்செய்தியில் அவர் மக்களிடையேதெய்வ நம்பிக்கையை வளர்க்க வேண்டியதையும் அதன் மூலமே மக்களிடை ஒற்றுமை ஏற்பட்டு எல்லா நலன்களும் கிடைக்குமென்றும் தமிழகத்திலே நடப்பவற்றைத் தாம் கவனித்து வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மதுரை மீனுட்சி கோயில் ஆடிவீதியிலே, ஸ்ரீ தம்பிரான் சுவாமிகளின் கதாப்பிரசங்கத்தைக் கேட்க தினம்தினம் பல்லாயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் ஆவலுடன் கூடியிருந்தனர். சீதையிடம் கணையாளியை அனுமான் அளித்ததைப்பற்றிக் கூறிய தினத்தில் தம்பிரான் சுவாமிக்கு மக்கள் தங்கத்தால் பவித்திர மோதிரத்தை அன்பளிப்புச் செய்தனர். சீதா கல்யாணம் நடந்தபோது பல பட்டு வேட்டிகளும் புடைவைகளும் காணிக்கையாகச் செலுத்தினர் பட்டாபிஷேகம் நடந்தபோதும் பல பல பரிசுகளையும் கொடுத்தார்கள். பலரும் பணக் காணிக்கை செலுத்தினர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுக்கு அடுத்தபடியாக தமிழகத்திலே ஈழத்துப் பெரியாருக்குப் பெரும் வரவேற்பும்மரியாதையும் நடப்பது ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளுக்குத்தான். அவர் இம்முறை தமிழகம் சென்று சிவராத்திரியன்று ராமேச்சரம் கோவிலிலே கதாப்பிரசங்கம் செய்துவிட்டு பின்னர் பல ஊர்களிலும் இப்பணியைச் செய்து வருகின்ருர். கிட்டத்தட்ட 3 மாதமாகப் போகின்றது. அவரைத் தமிழகம் விடுவதாக இல்லை. இன்னும் இரண்டு மாதங்களுக்கு அவருக்கு தருமபுரம், காஞ்சிபுரம், சென்னை முதலிய பல பல இடங்களிலும் நிகழ்ச்சிகளுள்ளன. அவரது கம்பராமாயண கதாகாலட்சேபத்தைக் கேட்ட பேராசிரியர் சீனிவாசகராகவன், 'இது இராமாயண விழா வல்ல, கம்பன்விழா' என்று பாராட்டினுர். ஸ்ரீ தம்பிரான் மூலம் ஈழத்தின் கலைப்புகழ் தமிழகத்தில் உயர்ந்து வருகிறதென்பதில் ஐயமில்லை.

0 0 0

கேரளம், ஆந்திரம் இந்த ராஜ்யங்களில் பலாத்கார இயக்கங்கள் பரவி பொது பொதுமக்களுக்கு பீதி அளித்து வருகையில் தமிழகத்திலே வெகுவாக அமைதி நிலவுகின்றது. அங்குபொது மக்கள் விவாதிக்கும் விஷ

கடந்த மாதம், இங்குள்ள அரசினர் பாடசாலை, கந்தசுவாமி கோவில் பலசரக்கு கடைகள் வீடுகள் மற்றும் பல கடைகளில், திருட்டுசம்பவங்கள் நடைபெற்று வந்தன. சாவகச்சேரி பொலிஸார் இச்சம்பவங்கள் பற்றி விசாரணை செய்தனர்.

தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் தினமும் இப்பகுதியில் ரோந்துசுற்றி வருகின்றனர்; இதனுல் குற்றச் சம்பவங்கள் இப்பகுதிகளில் குறைந்திருக்கிறது. தற்பொழுது இங்கு அமைதி நிலவிவருகிறது.

# கொலைநடந்த இடத்தை டி. ஐ. ஜீ. பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், வியாழன்

கொடிகாமம் பஸ்சாரதி சின்னப்பொடிவேலு, கொலை செய்யப்பட்ட இடத்தை உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ரி.பி. வீரப்பிட்டியா நேரில் சென்று பார்வையிட்டார். சம்பவம் நடந்த இடத்திற்கு இரவு பகல் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

சம்பவம்நடந்த இடத்தை டி. ஐ ஜி பார்வையிட்ட மறுதினம் வடபகுதி அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், சம்பவம் நடந்த இடத்திற்குசென்று நேரில் பார்வையிட்டார். பொலிஸ் அதிபருடன் சாவகச்சேரி பொலிஸ் அதிபர் திரு. கே. கதிர்காமநாதன் சார்ஜன்ட் தாமோதரம்பிள்ளை ஆகியோரும் சென்றிருந்தனர்.

சம்பவம் நடந்தஇடத்தில் சுமார் அரைமணி நேரம் தங்கி சுவரில் உள்ள சன்ன அடையாளங்களையும் பார்வையிட்டனர். கொடிகாமப் பகுதியில் ஆயுதம் தாங்கியபொலிசார் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

## கொடிகாமம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டனர். இக்குழுவினரால் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களில் ஒருவரான நவரத்தினம் என்பவரையும், இக்கொலை சம்பந்தமாக ஒரு லொறியையும் இக்குழுவினர் கடந்த பல வாரங்களாக தேடி வந்தனர். இதுவரை சந்தேக நபரான நவரத்தினமும், லொறியும் பொலிஸ் வலையில் சிக்கவில்லை. இக்கொலை சம்பந்தமாக பொலிஸார் இரு கார்களையும் கைப்பற்றி, கார் சொந்தக்காரர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இக்கொலை சம்பந்தமாக மர்மங்களை துலக்கும் பொருட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் சார்ஜன்ட் ரீ தாமோதரம், காங்கேசன்துறை குற்றப்பிரிவு பொலிஸ் கான்ஸ்டபின் எம். ஏ. லயனல், பளை பொலிஸ் கன்ஸ்டபின் ஜெயாத்தின ஆகியோர் அடங்கிய ஒரு விசேஷ குழு நியமிக்கப்பட்டிருந்தது. இக்குழு, கொலை சம்பந்தமாக பல இடங்களில் விசாரணை நடத்தி மூவரை கைது செய்தது. கொடிகாமம், மீசாலை, அச்சுவேலி பகுதிகளில் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இக்குழு விசாரணையை முடித்துக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கலைப் பெருவிழா

மாவிட்டபுரம், வியாழன்

கட்டுவன் பாலர் ஞானேதய கலை, உடல் வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் கலைப்பெருவிழா ஒன்று இன்று நிகழவிருக்கிறது.

## இன்று

யாழ்ப்பாணம், வியா

வல்லை முத்துமாரி அம்மன் கோவில் முன்றலில் இன்று ஈழத்து தவத்திரு திருநாவுக்கரசு சுவாமிகள் இளநீர்களை தலையில் அடித்துஉடைத்து சிரசாபிஷேக அற்புதம் நிகழ்த்துவார்

## கூட்டாட்சியினரின் புத்தாண்டு கொரகொல்லையில்

கொழும்பு, புதன்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று கொரகொல்லையில் கூட்டணி அபேட்சகர்களுடன் புதுவருடத்தைக் கொண்டாடினர். பண்டாரநாயக்கர் சமாதி முன்னிலையில் நடந்த வைபவத்தில் அபேட்சகர்கள் அவரது கொள்கையை பின்பற்றுவதாக உறுதி செய்துகொண்டனர்.

(சி.பி.ஏ.)

## உயிர் பாது...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை அப்பலோ-13 வீரர்கள் வந்திறங்கும் பசுபிக் சமுத்திரத்துக்கு சோவியத் கடற்படைக் கப்பல்கள் விரைந்துகொண்டிருக்கின்றன, சோவியத் பிரதமர் உதவிஅளிப்பதாக உறுதிஅளித்ததை தொடர்ந்து இந்தக் கப்பல்கள்அங்கு விரைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org